விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

சங்கு 23
ஒலி 343 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 11 ஞாயிற்றுக்கிழமை (27.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தமிழர் தாயகங்களில் தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் 68வது பிறந்தநாள் நிகழ்வுகள் நேற்றைய தினம் சனிக்கிழமை யாழில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது.

வல்வெட்டித்துறையில், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பூர்வீக வீட்டின் முன்பாக வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் கொண்டாடப்பட்டது.

அதன்போது பொதுமக்களுக்கு எள்ளுருண்டைகள் 19



## மாணவர்களிடையே
# ஐஸ் போதை பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்து வருவதாக தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. 19

# வீரமறவர்களை நினைவுகூர தயார் நிலையில் துயிலுமில்லங்கள்



- தமிழர் தாயகங்களில் உணர்வுபூர்வமாக நடத்துவதற்கு ஏற்பாடு.
- மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடர் ஏற்றப்படும்.

*(யாழ்ப்பாணம்)* தமிழினத்தின் விடுதலைக்காகத் தங்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் இன்றாகும்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

# 551
மாணவர்களுக்கு
வடக்கில் 9ஏ

06ஆம் பக்கம் பார்க்க

## வேம்படியில்
65 பேருக்கு
# 9A

19ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.இந்துக் கல்லூரியில்
62 மாணவர்களுக்கு
# 9ஏ

06ஆம் பக்கம் பார்க்க

# மாவீரர்களை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஒத்துழையுங்கள்

## மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியொலியை எழுப்பவும் வேண்டுகோள்


(யாழ்ப்பாணம்)

உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த உறவுகளுக்கான நினைவேந்தல் மிகவும் உணர்வுபூர்வமாக நடத்தப்படவுள்ளது.

இதன்போது அனைத்து பொதுமக்களும் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையிலுள்ள துயிலும் இல்லங்களுக்கும் நினைவேந்தல் இடங்களுக்கும் 19

# 13ஐ அமுலாக்க அரசு விருப்பம்

அமைச்சர் அலி சப்ரி



05ஆம் பக்கம் பார்க்க

# தனித் தமிழீழம் அமைக்க நடவடிக்கை எடுங்கள்

## இந்திய அரசிடம் ராமதாஸ் வலியுறுத்து

(சென்னை)

தனித் தமிழீழம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்க வேண்டும் என்று பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தமிழர்களுக்கென ஒரு தனி நாடாக தமிழீழம் அமைக்கும் முயற்சியில் இன்னுயிர் ஈந்த ஈழப் போராளிகளின் தியாகத்தை போற் 19

## தமிழ்த் தேசியக் கட்சிகள்
# பேச்சுவார்த்தை என்ற மாயைக்குள் ஏமாறக்கூடாது

### எம்.கே.சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சுவார்த்தை என்ற மாயைக்குள் ஏமாந்து விடாது தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலான பேச்சுவார்த்தையாக அதனை மாற்றி அமைக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம். திருமணத்திற்கு வெளிநாடு செல்ல விரும்பும் மணமக்கள் உடனடியாக தேவை. எல்லா வயதினரும் தொடர்பு கொள்ளவும்.

**காயத்திரி திருமண சேவை**

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
076 835 1932 / 021 223 2222
வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242 Laufen, Swiss
Tel: 0041768185443 Whatsapp இல் மட்டும்
(13503)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
**IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH**

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970
(13314)

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிறுவனத்திற்கு கீழ் குறித்த பணியாளர்கள் தேவை.

- தச்சு வேலையாட்கள்
- கூலி வேலையாட்கள்
- காவலாளி

தொடர்ச்சியான வேலையும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொட்டைக்காடு லேன்,
கோண்டாவில், கிழக்கு
(பஸ் டிப்போ அருகாமை)
077 300 1763
021 221 9909
(13589)

## கடை வாடகைக்கு

கே.கே.எஸ் வீதியில், மனோகரா சந்தி அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு. நேரில் வந்து பார்த்து விலை தீர்மானிக்கவும்
(13594)
077 482 1912
076 192 3444

## காணி விற்பனைக்கு

46 பரப்பு செம்மண் தோட்டம் மின்சாரம் மற்றும் கிணற்றுடன் புத்தூர் சுன்னாகம் வீதி நவற்கிரியில் 775 பஸ் பாதையை முகப்பாக கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (13590)
076 206 1693

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவை எனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர்.
(13584)
+1437 244 6737 - CANADA
076 349 0083 - Srilanka


## மரண அறிவித்தல்

### திரு. சண்முகம் தேவதாஸ் (பேபி)



அன்னை மடியில்
11.07.1945
ஆண்டவன் மடியில்
26.11.2022

யாழ்ப்பாணம் இளவாலை மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சண்முகம் தேவதாஸ் (பேபி) அவர்கள் நேற்று (26.11.2022) சனிக்கிழமை இறைவனின் பாதத்தில் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - கந்தாத்தப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - விஜயலக்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும் புஸ்பராணி அவர்களின் அன்புமிகு கணவரும் அஷாமி அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான வன்னித்தம்பி, குகதாஸ் மற்றும் சிவமணி, சச்சிதானந்தம், காலஞ்சென்ற ஜெயமணி மற்றும் நாகேஸ்வரி, சிவயோகம், கனகலிங்கம், ராதாதேவி, தம்பிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் நித்தியானந்தன், திலகராணி, காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் மகாவலி, ஆறுமுகசாமி, கலைவாணி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் கலைச்செல்வி, ஞானகிருஷ்ணசாமி, குமுதினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் புஸ்பதேவி, காலஞ்சென்ற தனரட்ணம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.11.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று மாரீசன் கூடல் பாகுதேவன் காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (13586)

0016478343004, 075 561 2899 (மகள்)
சிவமணி - 0019057551163 (சகோதரி, கனடா)
தம்பி - 0016477640685 (சகோதரன், கனடா)
மணியம் - 0016472813405 (சகோதரர்)
வாலி - 077 795 5134

தகவல் :-
குடும்பத்தினர்


## மணமகன் தேவை

யாழ். இந்து, 1993 ஆம் ஆண்டு, சுவாதி நட்சத்திரம், துலாம் ராசி, தகைமை : சித்த மெடிசின் இலக்கினத்தில் சூரியன், செவ்வாய் டொக்டர் உள்ளகப் பயிற்சி
(13588)
077 036 5792

## இராஜ மருத்துவம்

வாதம், குத்துளைவு, பாரிசவாதம், கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு, சளி, தும்மல், பீநசம், நீரிழிவு, கெர்ப்பவாயு, நெஞ்சுக்குத்து, இளநரை, சொடுகு, மயிர் வளர்ச்சியின்மை, நித்திரையின்மைக்கு சிகிச்சை பெற
பேரறிஞர் DR.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர், T.P:076 274 4488
வல்வை வீதி, சங்கானை (C-5335)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை
(13592)

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 814 7389, 077 986 5457

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு "Water Proofing"

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப் பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

விசேட விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்
(13591)

**North & East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com


## மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

எமது திருவையாறு திருமகள் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினரும் கடந்தகால செயலாளரும் கிளி / முக்கொம்பன் ம.வி யின் அதிபருமான

### திரு. ப. ஜோயல் பியசீலன் (J.P)

( M.Ed., B.Ed., Trd in Maths, PGDEM, SLPS )

அவர்கள் KOICA நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக கடந்த மாதம் தென் கொரியா நாட்டிற்கான கல்விசார் பயணத்தை மேற்கொண்ட குழுவினருள் ஒருவராக சென்று திரும்பியுள்ளார். இவர் கொரியா நாட்டின் கல்வி முறைமைகள் மற்றும் கற்பித்தல் நுட்பங்கள் தொடர்பாக பெற்றுக்கொண்ட அனுபவங்களும் பயிற்சிகளும் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காகப் பயனுறட்டும்.

மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.



(C-5339)

திருமகள் சி.க.கூ. சங்கம், திருவையாறு, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மத்திய கல்லூரியில் 50 இலட்சங்கள் பெறுமதியான 25, க.பொ.த.(உ/த)-2024 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

## Rupees 50 Lakhs Valued Scholarship for 25 Students of A/L-2024 at JCC

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராச்சியம் மற்றும் யாழ். மத்திய கல்லூரி 1987 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் அமைப்பு இணைந்து வழங்கும் 50 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான புலமைப்பரிசில் திட்டம்.

**விண்ணப்பிக்க தகுதியுள்ள மாணவர்கள்**

**வகை1: யாழ்.மத்திய கல்லூரி அல்லாத வேறு பாடசாலை மாணவர்கள்**

க.பொ.த.(சா/த)-2021 இல் குறைந்த பட்சம் 6A விசேட சித்திகளைப் பெற்று யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த.(உ/த)-2024 கற்கைநெறிக்கு தம்மை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள்.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை: 10 (பத்து மாணவர்கள்)

புலமைப்பரிசில் நிதி வழங்குநர் : யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்சங்கம்-ஐக்கிய இராச்சியம் (JCC OBA-UK)

**வகை 2: யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள்**

க.பொ.த.(சா/த)-2021 இல் குறைந்த பட்சம் 6A விசேட சித்திகளைப் பெற்று தொடர்ந்தும் இக் கல்லூரியில் க.பொ.த.(உ/த)-2024 கல்வியை கற்க விரும்பும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள்.

வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை: 15 (பதினைந்து மாணவர்கள்)

புலமைப்பரிசில் நிதி வழங்குநர் : யாழ்.மத்திய கல்லூரி 1987 உயர்தர பிரிவு மாணவர்கள் அமைப்பு (JCC-1987 A/L Batch)

மேற்படி கல்வித்தகைமையுடன் விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மொத்த புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை -25**

**புலமைப்பரிசில்களின் பெறுமதி**

தலா ஒரு மாணவனுக்கு 2 இலட்சம் ரூபாய்கள் வீதம் 25 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய்கள் புலமைப்பரிசில் வழங்கப்படும்.

**புலமைப்பரிசில் வழங்கப்படும் முறை**

மாதந்தோறும் ரூ.7000.00 ப்படி 28 மாதங்களுக்கு வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு தவணைப்பரீட்சை பெறுபேறுகளை இறுதி பரீட்சை வரை ஒழுங்காக எமக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒரு தடவை மாத்திரம் ரூ.4000.00 வழங்கப்படும்.

**புலமைப்பரிசிலின் நோக்கம்**

க.பொ.த.(உ/த) - 2024 பரீட்சையில் 3A விசேட சித்திகளை பெறுதல்.

**மேலதிக விபரங்களுக்கு:** திரு.ம.வித்தியானந்தநேசன் President JCCOBA 0777642379
திரு. மு.இராஜவரோதயம் Secretary JCCOBA 0776057836
திரு.அ.கபில்நேசன் Treasurer JCCOBA 0778469025
E-mail address:JccScholarship@gmail.com

"Central's Flag must never be lowered"

(C-5336)

**யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்- 2022**





**Sri Mahakaliamman Devasthanam, Valaithoddam, Iyakkachchi Temple Trust**

**ஆலய நிர்வாக உத்தியோகத்தர்**

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தை சேர்ந்த , ஆலய வழிபாடுகளில் ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை .

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காட்டலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிட்ட நேரத்திற்கு நடாத்தி ஆலய உற்சவங்களையும் ,சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடை பெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்கு தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் ஏற்று செயற்படுவது இப் பதவிக்கு தேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்த நிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள ,தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும் .

Quick Ads

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 0772078455
தபாலில் : 3/4 , Rockwood Place , Colombo 07

(C-1852)



# மணிவிழா வாழ்த்துக்கள்

27.11.2022



## திரு. பொன்னையா பாலச்சந்திரன்

Congratulations

[ஆய்வுகூட உதவியாளர்]

எமது கல்லூரி அன்னையின்
முகாமைத்துவ மைந்தருள் ஒருவராய்
வருகை தந்த நாள் முதலாய்
முகாமைத்துவம் பெற்ற உதவி
எடுத்தியம்பல் அரிதாகும்
தொடுத்த பணி பலவாகும்
ஆய்வு கூட உதவியாளர் பதவியில் வருகை தந்தீர்
ஆய்ந்தறிந்தீர் பல்துறை அறிவும்
மாய்ந்து மாய்ந்து புரிந்த பணிகள்
மனங்களில் என்றும் நினைவாய் கனக்கும்!

பதினாறு வயது பாலா உமக்கு
அகவை அறுபது அடைந்தது என்று அறிந்தவர்
கூறக்கேட்டு வாழ்த்த வந்தோம்
வாழ்க வளமுடன் ஆண்டுகள் நூறு

(13582)

வாழ்த்துவோர்:- அதிபர், பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


# ஆடை தொடர்பான சுற்றறிக்கை இரத்தாகலாம்-பிரதமர்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் வசதியான ஆடைக்களை அணிந்து கடமைக்கு சமுகமளிக்குமாறு விடுக்கப்பட்ட சுற்றறிக்கை எதிர்வரும் காலங்களில் இரத்துச் செய்யப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் அரச நிர்வாகம், உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கால்பந்து

# ஈரான், செனகல் அணிகள் வெற்றி முதல் அணியாக கட்டார் வெளியேற்றம்





கட்டார் FIFA கால்பந்து உலகக்கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குழு நிலைப் போட்டிகளில், ஈரான் மற்றும் செனகல் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

அஹமட் பின் அலி விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், ஈரான் மற்றும் வேல்ஸ் அணிகள் மோதின.

குழு பி பிரிவில் நடைபெற்ற இப்போட்டியில், ஈரான் அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில், ஈரான் அணி சார்பில், மேலதிக நேரத்தில் ரூஸ்பே செஷ்மி 98 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் ராமின் ரெசையன் 101 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

மற்றொரு போட்டியில் அல் துமானா விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், கட்டார் அணியும் செனகல் அணியும் மோதின.

குழு ஏ பிரிவில் நடைபெற்ற இப்போட்டியில், செனகல் அணி, 3-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. தோல்வியை தழுவிய தொடரை நடத்தும் கட்டார் அணி, தொடரிலிருந்து முதல் அணியாக வெளியேறியது.

செனகல் அணி சார்பில், பவுலே தியா 41 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், ஃபமாரா டைட் ஹியூ 48 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் பம்பா டைன்ங் 84 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

கட்டார் அணி சார்பில், மொஹமட் முன்டாரி போட்டியின் 78 ஆவது நிமிடத்தில் அணிக்காக கோலொன்றை பெற்றுக் கொடுத்தார்.

மற்றைய போட்டியில் கலீபா விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், நெதர்லாந்து மற்றும் ஈக்வடோர் அணிகள் மோதின.

குழு ஏ பிரிவில் நடைபெற்ற இப்போட்டியானது, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதில் நெதர்லாந்து அணி சார்பில், கொடி காக்போ 6 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

ஈக்வடோர் அணி சார்பில், என்னர் வெலன் ஸியா போட்டியின் 49 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். (4)

# ஆப்கானிஸ்தானிடம் இலங்கை சொந்த மண்ணில் தோல்வி

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், ஆப்கானிஸ்தான் அணி 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

கண்டி- பல்லேகல மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 294 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, இப்ராஹிம் சத்ரான் 106 ஓட்டங்களையும் குர்பாஸ் 53 ஓட்டங்களையும் ரஹமத் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும் ராஜித, தனஞ்சய லக்ஷான், லஹிரு குமார மற்றும் மகேஷ் தீக்ஷன ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 295 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 38 ஓவர்கள் நிறைவில் 234 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், ஆப்கானிஸ்தான் அணி 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பெத்தும் நிஸங்க 85 ஓட்டங்களையும் வனிந்து ஹசரங்க 66 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், பாரூக்கீ 4 விக்கெட்டுகளையும் குல்பதீன் நய்ப் 3 விக்கெட்டுகளையும் யாமீன் அஹமட்ஷாய் 2 விக்கெட்டுகளையும் ரஷித் கான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 120 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக, 106 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட இப்ராஹிம் சத்ரான் தெரிவு செய்யப்பட்டார். (4)

**மணமகள் தேவை**

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 பட்டதாரி லண்டன் மணமகனுக்கு மணமகள் தேவை. விஞ்ஞான பட்டதாரி விரும்பத்தக்கது.

Whatsapp

071 828 7793

(C-5340)

**விற்பனைக்கு**

10 Kw டீசல் England Generator உம் டீசல் நீர் இறைக்கும் இயந்திரமும் வண்டிலுடன் விற்பனைக்கு உண்டு.

077 480 9019

(13595)

## ஆர்ஜென்டினாவை வீழ்த்திய

# சவுதி அரேபிய வீரர்களுக்கு ரோல்ஸ் ரொய்ஸ் கார் பரிசு

உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் ஆசிய கண்டத்தில் உள்ள சவுதி அரேபியா யாருமே எதிர்பார்க்காத வகையில் 2 முறை சாம்பியனான ஆர்ஜென்டீனாவை அதிர்ச்சிகரமாக தோற்கடித்தது. 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இருந்தது. இந்த வெற்றியால் சவுதி அரேபியாவில் மகிழ்ச்சி அலை கடல் பொங்கியது. அந்நாட்டு மன்னர் மறுநாள் பொது விடுமுறை அறிவித்தார். இந்த நிலையில் ஆர்ஜென்டீனாவை வீழ்த்தி வரலாற்று வெற்றியை பெற்ற சவுதி அரேபிய கால்பந்து வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ரோல்ஸ் ரொய்ஸ் கார் பரிசாக வழங்கப்படும் என்று அந்நாட்டு இளவரசர் முகமது பின் சல்மான் அல் சவுத் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் ரோல்ஸ் ரொய்ஸ்காரின்விலை ரூ.8.99 கோடி முதல் 10.48 கோடி வரையில் விற்கப்படுகிறது. இது மாதிரியான விலை உயர்ந்த பரிசு வீரர்களுக்கு வழங்கப்படுவது இது முதல் முறையல்ல. 1994 இல் பெல்ஜியத்தை வீழ்த்திய போது இது மாதிரியே கார் பரிசு வழங்கப்பட்டது. சவுதி அரேபியா மற்றைய போட்டிகளிலும் வெற்றி பெற்றால் வீரர்கள் மேலும் பரிசு மழையில் நனைவார்கள். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ அமுல்படுத்த அரசாங்கம் விருப்பம்

## அலி சப்ரி தெரிவிப்பு

(கொழும்பு)

**13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அறிவித்துள்ளார்.**



ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

2018 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சட்டமூலம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது என்றும் கூறியுள்ளார். மாகாணங்களுக்கு புதிய எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும் அதற்கு சில சட்டத் தடைகள் இருப்பதால் அது நடைபெறவில்லை என்றும் அமைச்சர் அலி சப்ரி சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதோடு அவர்களிடமுள்ள அதிகாரங்கள் அவர்களுக்கு திருப்ப வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஐ.நா. உள்ளிட்ட பொதுவெளியில் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# அரச ஊழியர்களின் வீட்டுக்கு அண்மித்த இடங்களில் வேலை

## ஆராய்கிறது அரசு

(கொழும்பு)

போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதால், அரசதுறை ஊழியர்களுக்கு வீட்டுக்கு அருகாமையில் உள்ள அலுவலகங்களை பணிக்கு ஒதுக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி, வீட்டுக்கு அண்மித்த பிரதேசங்களில் உள்ள அரச அலுவலகங்களுக்கு அரச ஊழியர்களை இடமாற்றம் செய்யும் முறைமை ஏற்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் டாக்டர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் இது தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வால் பேருந்துகளில் கடமைக்குச் செல்ல முடியாமல் அரச ஊழியர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (4)


**மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து)**
**பதவி வெற்றிடங்கள்.**

1. தாதிய பரிபாலகர் (Matron)– யாழ்ப்பாணத்தில் இயங்கும் கிளைக்கு மட்டும்.

2. உதவி கணக்காளர் (Assistant Accountant)

தகைமைகள்:-

- Management Degree/AAT அல்லது பகுதியளவிலான CIMA / ACCA/HNDA மற்றும் ஸ்ரீலங்கா பட்டயக் கணக்காளர் பரீட்சையில் சித்தி.
- கணக்குப் பகுதியில் 2-3 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அனுபவம், விசேடமாக கணனி மயப்படுத்தப்பட்ட கணக்குப் பொதியில் (Accounting System) அனுபவம்
- MS-Offfice இல் சிறந்த அறிவு (Excel மற்றும் Word)
- தனித்துவமாக சேவையாற்றக்கூடிய திறனும், நிதிப் பகுதியின் குழுவுக்கு தலைமை தாங்கும் திறமையும்.

3. பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security Guard)

- க.பொ.த (சா/த) சித்தி
- முன் அனுபவம் கருத்திற் கொள்ளப்படும்.

மேற்குறித்த தகைமையுடையவர்கள் தங்களது சுயவிபரத்தினை நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) மூலமாகவோ 10.12.2022 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரி 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு இடம்பெறும்.
- விண்ணப்பத்துடன் தகைமைக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து)
மூளாய்,சுழிபுரம்
E-mail:- moolaii@yahoo.com

தொடர்புகளுக்கு -
021 225 0441

(அ-5337)


## பல்கலைக்கழகங்களில்

# பட்டம் பெறாதவர்களை நீக்க கல்வி அமைச்சு முடிவு

(கொழும்பு)

குறித்த காலத்துக்குள் பட்டம் பெறாத மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இருந்து நீக்குவது தொடர்பான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்துக்கு கொண்டுவர கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சில மாணவர்கள் 9 முதல் 10 வருடங்கள் வரை பரீட்சைக்குத் தோற்றாமல் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கி, அரசியல் பணியை மேற்கொள்வதனைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைக்குத் தோற்றாமல் நீண்டகாலமாக பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களின் கணக்கெடுப்பை குறித்த காலத்துக்குள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு பல்கலைக்கழக வேந்தர்களின் ஒத்தாசையை பெறவுள்ளதாகவும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (4)


# இராசிபலன்

27.11.2022
கார்த்திகை 11, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 8.47 மணிவரை


பூராடம் பிற்பகல் 5.03மணிவரை
சுபநேரம் 9.12-10.42 மணிவரை
இராகுகாலம் 4.42-6.12 மணிவரை

சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்
மிருகசீரிடம்,திருவாதிரை


**வளவன்**





நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.





வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்,உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்,உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.





ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்கள் நண்பர்களிடையே சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




வாக்கு மேன்மையுண்டு எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.




செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




சடங்கு சம்பிரதாயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.




முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.சா/தரப் பரீட்சை
# வடமாகாண பெறுபேறில் யாழ்.வலயம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

**2021ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப் படையில் 551 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தர சித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர்.**

வடக்கு மாகாணத்தில் இருந்து 16 ஆயிரத்து 564 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையிலேயே 551 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தியை பெற்றுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 3 ஆயிரத்து 9 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 193 மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ தரத்தில் சித்தியடைந்துள்ளனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 56 பேருக்கும் வடமராட்சி கல்வி வலயத்தில் 56 பேருக்கும் வலிகாமம் கல்வி வலயத்தில் 53 பேருக்கும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 49 பேருக்கும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 47 பேருக்கும் மன்னார் கல்வி வலயத்தில் 39 பேருக்கும் தென்மராட்சி கல்வி வலயத்தில் 36 பேருக்கும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 12 பேருக்கும் துணுக்காய் கல்வி வலயத்தில் 9 பேருக்கும் தீவக கல்வி வலயத்தில் ஒருவருக்கும் 9 ஏ சித்தி கிடைத்துள்ளது. (4-33)

# மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை - சுப்பர் மடத்தில் பொதுமக்களால் மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

சுப்பர்மடம் முனியப்பர் ஆலயத்திலிருந்து மங்கள வாத்திய இசையுடன் சுப்பர்மடம் பொது நோக்கு மண்டபத்திற்கு மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டு அங்கு மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு ஈகைச் சுடர்கள் ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கப்பட்டது. (4-33)

# சான்றுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸாரினால் பாரப்படுத்தப்பட்ட NP MF 4705, NP VF 9582, NP MH 7940 ஆகிய இலக்கங்களையுடைய மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 9 அடி நீளமான பனைமரச் சலாகைகள்-04, 7 அடி நீளமான பனைமரச்சலாகைகள்-03 ஆகிய சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப்பின் 2023.02.08 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிமைக் கோரிக்கையை நிலை நாட்டும்படி நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# கொற்றாவத்தையில் திருட்டு சந்தேகநபர் கைது
## 21 பவுண் நகை மீட்பு



(கரணவாய்)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொற்றாவத்தை பகுதியில் கடந்த திங்கட்கிழமை வீட்டில் யாரும் இல்லாத பகல் வேளை 21 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். உடுப்பிட்டியைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 35 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் மீட்கப்பட்டன என வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (4-60)

# யாழ். இந்துக் கல்லூரியில் 62 பேருக்கு 9 ஏ

(யாழ்ப்பாணம்)

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

வெளியான பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் 99 சதவீதத்தினர் சிறந்த பெறுபேறுகளை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய 255 மாணவர்களில் 62 மாணவர்கள் 9 ஏ சித்திகளையும் 46 மாணவர்கள் 8 ஏ சித்திகளையும் 29 மாணவர்கள் 7ஏ சித்திகளையும் பெற்றுள்ளனர். (4-33-104)

# ஐஸுடன் பெண் கைது

(ஏறாவூர்)

ஹெரோயின், ஐஸ் போதைப்பொருட்களுடன் 27 வயது பெண்ணொருவர் சம்மாந்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் விற்பனை தொடர்பாக சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வீடு ஒன்றை முற்றுகையிட்டதிலேயே குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர். (4)

# வனமே என் இனமே காணொலிப் பாடல் வெளியீடு



(யாழ்ப்பாணம்)

வனம் இன்றிப் போனால் எம் இனம் இன்றிப் போகும் என்ற கருப்பொருளில் வனங்களின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லும் 'வனமே என் இனமே' என்ற காணொலிப் பாடல் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடு செய்துள்ள மலர்க் கண்காட்சியின் போதே இக் காணொலிப்பாடல் வெளியிடப்பட்டுள்ளது. (4-33)

## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(சாவகச்சேரி)

மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நிலைய மண்டபத்தில் சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் முன்னிலையில் இடம் பெற்றிருந்தது. இதன்போது தலைவராக செ.சிரஞ்சீவி, செயலாளராக இ.கபிசன், பொருளாளராக க.சாருஜன், உபதலைவராக நா.சரவணமுத்து, உப செயலாளராக சு.யோகேஸ்வரராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 380 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 250 |
| தக்காளி | 350 | 320 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 180 | 200 |
| கோவா | 250 | 280 | 300 |
| கரட் | 300 | 480 | 500 |
| பூசணி | 160 | 120 | 140 |
| புடோல் | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 160 | 130 | 140 |
| சின்ன வெங்காயம் | 600 | 600 | 800 |
| பெரிய வெங்காயம் | 350 | 240 | 250 |
| பாகற்காய் | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 180 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 450 |
| பீற்றூட் | 200 | 400 | 450 |
| கறிமிள்காய் | 600 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 700 |
| போஞ்சி | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 200 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 200 | 250 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 260 | 300 |
| வெங்காயப்பூ | -- | 400 | 500 |
| முள்ளங்கி | 160 | 160 | 240 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 45 | 40 |
| ஈரப்பலா | 100 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 372

Viber 076 636 3378





# அதிகாரப்பகிர்வு ஆதரவும் எதிர்ப்பும்!

அபிமன்யு

இலங்கைத் திருநாட்டில் புரையோடிக் கிடக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது இழுத்தடிப்புச் செய்யப்பட்டுக் கொண்டு சென்றதற்கு முக்கிய பங்கை வகிப்பவர்கள் பேரினவாத அரச தலைவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எங்கு பிரச்சினை எழுந்தது என்ற தேடலைச் செய்யாது ஒரு இனம் சார்ந்து நின்றதன் விளைவே இன்று இந்த நாடு இந் நிலையில் இருப்பதற்குக் காரணமாகிறது.

காலம் காலமாக ஆட்சிக்கு வந்தவர்கள் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளை வழங்கு வதற்கு முன்வராமல் சிங்கள மக்களின் மனங்களில் சிறுபான்மை இனங்கள் தொடர்பில் வன்மத்தை வழக்கும் செயலையே செய்து வந்தார்கள், செய்து வருகின்றனர்.

இந்த நாட்டின் பூரண உரித்துடன் வாழ்ந்த இனத்தை "இது உங்கள் நாடு இல்லை" எனச் சீண்டியதன் விளைவே நாட்டில் போர் வெடிக்கக் காரணமானது.

தமது உரிமைகளை வென்றெடுக்கப் போரிட்டவர்களை சிங்கள இனத்துக்கு எதிராகப்போரிடுகிறார்கள் என்ற மாயையை உருவாக்கி அதை சிங்கள மக்கள் மத்தியில் நம்பும்படியாகச் செய்ததனாலேயே சிங்கள மக்கள் தமிழினத்தை பயங்கரவாதிகள் என்ற ஐயக் கண் கொண்டு பார்க்கும் நிலை ஏற்பட்டது.

இறுதிப் போரில் கூட போர்க்குற்ற மீறல்கள் நடைபெற்றது என்பதற் கான ஆதாரங்கள் வெளி யாகிய போதும் கூட அவை சிங்கள இனத்துக்கு எதிரான ஆதாரங்களாய் சுட்டிக் காட்டி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய சம்பவங்களை செய்தவர்கள் பெரும்பான்மை அரச தலைவர்கள் என்றால் மிகையாகாது.

போர் தமிழ்-சிங்கள இனங்களை பாதிப்புக்குள்ளாக்கியது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. எனினும் போரின் தாக்கம் தமிழினத்தையே பெரிதும் பாதித்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

போர் தமிழினத்தை கருவறுத்துவிட்டது என்பதே உண்மையானது.

இதை எவரும் மறுத்து விட முடியாது. அந்தளவிற்கு முள்ளிவாய்க்கால் இறுதிக் கணங்கள் வரை ஒரு இனம் எவற்றை இழக்கக் கூடாதோ அவற்றை எல்லாம் இழந்தது.

முள்ளி வாய்க்காலுடன் அனைத்தும் முடிந்துவிட்டது என நிம்மதிப் பெருமூச்சு விட்ட தமிழினத்துக்கு அதன் பின்புதான் மிகக் கொடும் சோதனைகள் வாட்டத் தொடங்கியது.

போரின் இழப்பிற்குப் பின்னர் தமிழினத்தின் பண்பாடு, கலாசாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டது, அழிக்கப்படுகின்றது என்பதை எவரும் மறுத்துவிடவோ மறந்து விடவோ முடியாது. அந்தளவிற்கு தமிழர் பிரதேசங்களை இலக்கு வைத்து போதை விதைப்பு மிகத் தாராளமாய் நடந்து கொண்டிருக்கிறது.

இதன் விளைவு எம் இனம் சமூகம் மொழிப் பற்று, இனப்பற்று, மண் பற்று என்பவற்றை இழந்து போதைக்கு அடிமையாகி தம்மை திரைப்படக் கதாநாயகர்களாய் கற்பனை செய்து சீரழிந்து கொண்டிருக்கிறது.

இவற்றை நாம் கூறும் போது இல்லை என்று யார் கூறுவார்களாக இருந்தாலும் அவர்கள் விலை போனவர்களே என்பது தான் முடிவாகும்.

தமிழினம் பட்டதுன்ப துயரங்களுக்கு மீட்சி கிடைக்க பாடுபட வேண்டிய எம் தமிழ் அரசியல் தலைவர்கள் கதிரை மோகத்தில் சங்கீதக் கதிரை விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் வேதனை.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வை வழங்க இந்த மன்றில் உள்ளவர்களுக்கு சம்மதமா? எனக் கேள்வி எழுப்பியிருந்தார். இக்கேள்வியை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவைப் பார்த்து கேட்டார் ஜனாதிபதி.

அதற்குப் பதிலளித்த அவர் நான் எப்போதும் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரிப்பவன் என்றார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பார்த்து நீங்கள் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளிப்பீர்களா என்றார்.

இதற்கு மகிந்தவின் பதில் சிரிப்பாக இருந்தது. சிரித்தால் போதாது. ஆசனத்தில் இருந்து எழுந்து உங்கள் நிலைப்பாட்டைக் கூறுங்கள் என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல. தனது ஆசனத்தில் இருந்து எழுந்த மகிந்த அதிகாரப் பகிர்வை வழங்க எனக்கு சம்மதம் என்றார்.

தனது பேச்சை பிரதமர் தினேஷ் குணவர்த்தன பக்கம் திருப்பினார் லக்ஷ்மன் கிரியெல்ல. உங்களுக்குச் சம்மதமா என்றார். அதற்கு பிரதமரின் பதில் சிரிப்பாக இருந்தது.

பார்த்தீர்களா பிரதமர் அதிகாரப் பகிர்வுக்கு எதிரானவர் என்று கூறினார் லக்ஷ்மன் கிரியெல்ல.

பாராளுமன்றில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசியது வரவேற்கத்தக்க விடயம் என்பதுடன் சிங்கள தலைவர்கள் மத்தியில் இந்த நாட்டின் பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வை முன்வைப்பது அவர்கள் மனங்களின் மாற்றத்தை உணரக்கூடியதாக உள்ளது.

ஆனாலும், அந்த மாற்றம் முழுமையான மாற்றமா என்பதுதான் கேள்விக்குறி.

ஆம், தமிழினத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஒருபோதும் அதற்கு இடமளியோம் என்று பேசியிருக்கிறார்.

இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு தீர்வாக அமையும் என பலரும் கருதும் நிலையில் சரத் வீர சேகர போன்றோர் இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் போது அது சிங்கள மக்கள் மனங்களில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாய் அமையும்.

அதன்பின் சிங்கள மக்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பர். அதிகாரப்பகிர்வை தமிழினத்திற்கு வழங்கினால் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும். தமிழீழம் மலரும் என்ற ஒற்றை வார்த்தை போதும் சிங்கள மக்களின் மனங்களை மாற்றுவதற்கு.

நாட்டில் புரையோடிக் கிடக்கும் இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு காலம் கனிந்துள்ள சமிக்ஞைகள் தென்படுகின்றன.

இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆவது வருடத்தில் இலங்கைத் திருநாட்டில் இன, மத முரண்பாடுகளைக் களைந்து தீர்வை எட்டினால் நாடு முன்னோக்கிப் பயணிக்கும்.

இந்த நாட்டில் பூர்வீக உரித்துடைய சிறுபான்மை தமிழினத்திற்கு மறுக்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படுமானால் அது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும்.

**“ இந்த நாட்டில் புரையோடிக்கிடக்கும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை தீர்க்க வேண்டும் எனின் சரியான முறையில் அதி காரங்கள் பிரிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். ”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்து மாவீரர்களுக்கு அக வணக்கம் செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று மாவீரர்களுக்கு அக வணக்கம் செலுத்தினர்.

அக வணக்கத்தினிடையே விதானையார் விஸ்வலிங்கம் விம்மி விக்கிப்பது அனைவரையும் நெகிழ வைத்தது.

ஆம், விதானையார் விஸ்வலிங்கத்தின் மூத்த மகன் மாவீரர். நினைவேந்தலின் போதெல்லாம் விதானையார் விம்மி அழுவது வழமை.

மாவீரர்களுக்கான அக வணக்கம் நிறைவுற்று ஆலடியில் அனைவரும் அமர்ந்து கொண்டனர்.

ஆலடியில நிசப்தம் சூழ்ந்து கொண்டது. நிசப்தத்தை ஊடறுத்த கங்காணி கார்த்திகேயன்; அதுசரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்ர இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகுமோ.

**மூப்பர்:** அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கு நீங்கள் சம்மதமா? என்று ஜனாதிபதி ரணில் பாராளுமன்றத்தில கேட்ட போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் ஏனையவர்களும் தலையாட்டினவியள். அதேபோல அதிகாரப் பகிர்வு வழங்க நாங்கள் தயார் எண்டு சஜித் பிரேமதாஸ கூறியிருக்கிறார்.

தமிழ் அரசியல் தரப்புகளின்ர நிலைப்பாடு என்ன என்பதைத் தான் அறிய வேணும்.

**சாத்திரியார்:** தமிழ் அரசியல் தரப்புகளுக்கு இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பம் எண்டு சொல்லுறது ஆட்சியாளர்களின்ர ஒரு வழமை என எங்கட தமிழ் அரசியல் தரப்புகளில ஒரு பகுதி சொல்லுது. அதேநேரம் இன்னொரு தரப்போ, ரணிலின்ர வலைக்குள்ள தமிழ் அரசியல்வாதிகள் விழுந்து விடக்கூடாது என்கிறது.

இதுகளைப் பார்க்கிற போது தான் முதலில் நம்பிக்கையீனங்கள் தகர்த்தெறியப்பட வேணும் எண்ட சிந்தனை ஏற்படுகிறது.

**வாத்தியார்:** என்ன தான் இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலமாகத் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

அந்த வகையில இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்குப் போவது அவசியமாகிறது. அதேநேரம் தமிழ் அரசியல் கட்சிகள் தங்களிடையே பேதங்களை மறந்து ஒற்றுமைப்பட வேணும். எங்களுக்குள்ள ஒற்றுமை இருந்தால் தான் எதையும் நாங்கள் செய்யலாம்.



## தீர்வை விரும்பாத தமிழ் அரசியல்வாதிகளும் இருக்கினம்

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. எங்களுக்கான தீர்வு என்ன என்பதை முதலில நாங்கள் தீர்மானிக்க வேணும். சும்மா சமஷ்டி என்ற ஒற்றைச் சொல்லை வைத்துக் கொண்டு சமஷ்டிதான் தீர்வு எண்டு நாங்கள் சொன்னால், உலகம் எங்களை நகைக்கும்.

ஆகையால எங்களுக்கான தீர்வு என்ன என்பது எழுத்து மூலமாக இருக்க வேணும்.

**கங்காணி:** அதுதானே தமிழ் மக்கள் பேரவை, இனப்பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டம் என்ன என்பதை எழுத்து வடிவில தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் தயாரித்து அச்சிட்டிருக்குது.

**விதானையார்:** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால், தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தைக் கையில எடுத்தால் அது பேரவைக்குப் பெருமையாகப் போய் விடும் என்று நினைக்கிற எங்கட தமிழ் அரசியல்வாதிகள் மத்தியில ஒண்டும் செய்ய முடியாது.

**சிறாப்பர்:** விதானையார் அப்படிச் சொல்லிப் போட்டு நாங்கள் விட முடியாது. தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டம் என்பது தமிழ் அரசியல் தரப்புகளும் துறைசார் தமிழ்ப் புத்திஜீவிகளும் கூடியிருந்து தீர ஆராய்ந்து தயாரித்த ஒரு தீர்வுத் திட்டம்.

அதுமட்டுமல்ல. குறித்த தீர்வுத் திட்டத்தின் தெளிவுபடுத்தல்கள், அது தொடர்பிலான தமிழ் மக்களின் கருத்துக்கள் என அனைத்தும் நடைபெற்று செம்மை செய்யப்பட்ட பின்னர் தான் பேரவையின்ர தீர்வுத் திட்டம் இறுதி வடிவம் பெற்றது.

ஆகையால தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தை தமிழ் அரசியல் தரப்புகள் கையிலெடுத்து அதனை மீள் வாசிப்புக்குட்படுத்தி, அந்த அடிப்படையில எங்களுக்கான தீர்வுத் திட்டத்தை முன்னகர்த்த வேணும்.

இதை விடுத்து எழுந்தமானமாகப் பேச்சுவார்த்தைக்குப் போய், அங்க கண்டதையும் கதைத்து நிலைமையைக் குழப்பினால் எல்லாம் அம்போதான்.

**சாத்திரியார்:** சிறாப்பற்ற கருத்தை நானும் ஆமோதிக்கிறன். ஏனெண்டால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்ர ஏற்பாட்டில இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை நடக்குமாக இருந்தால், அதில இருந்து ஒரு தீர்வுக்கு வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படத் தான் செய்யும்.

அதேநேரம் அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில முடியுமாக இருந்தால் அல்லது குழப்பமாக இருந்தால், அதற்குக் காரணம் தமிழ் அரசியல் தரப்புகள் என்ற மாதிரியான தோற்றப்பாடு உலகிற்குக் காட்டப்படும்.

அதால தான் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட்டுச் செயற்பட வேணும் எண்டு சொல்லுறம்.

**மூப்பர்:** இஞ்சே சாத்திரியார், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகிற விடயத்தில சிங்களத் தரப்புகளில ஒரு பகுதிக்கு எவ்வளவு விருப்பமில்லையோ அதுபோல தமிழ் அரசியல் தரப்பிலும் ஒரு பகுதியினருக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறதில துண்டா விருப்பமில்லை.

**பண்டிதர்:** ஓ! நாடு குழப்பத்தில இருக்கிறது சில அரசியல் கட்சிகளின்ர வளர்ச்சிக்கு அடிக்கட்டுப் பசளை என்ற உண்மையை நாங்கள் ஏற்றுத்தானாக வேணும். ஆனாலும் என்னைப் பொறுத்தவரை இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளின் போது, வெளிநாட்டு நடுவர் ஆயம் ஒன்று நிலைமையைக் கண்காணிப்பதும் நெறிப்படுத்துவதும் அவசியமாக இருக்கும்.

ஆகையால வெளிநாட்டு அனுசரணையோட அல்லது வெளிநாட்டு நடுவர் ஆயத்தின்ர துணையோட பேச்சுவார்த்தை நடத்துறதுதான் நல்லது என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்துவம்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

**வாத்தியார்:** வியட்நாம் முகாமில உயிரிழந்த சாவகச்சேரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரன் என்ற குடும்பஸ்தரின் உடலை சாவகச்சேரிக்குக் கொண்டு வர அரசாங்கம் உதவி செய்ய வேணும்.

ஓர் ஏழைக் குடும்பம். நான்கு பிள்ளைகள் தந்தையை இழந்து தவித்து நிற்கினம். இந்த நேரத்தில அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்யிறது எங்கட கடமை.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகக் கிண்ண கால்பந்தாட்டங்களைப் பார்ப்பதுண்டா வியாசரே?

**சுதன்** **குப்பிழான்**

**மாவீரர்களின் கனவு நினைவாக ஈழத்தை தீர்வாகப் பெற்றுக்கொள்வார்களா எம் தமிழ்க் கட்சிகள்?**

எம் தமிழ் அரசியல்வாதிகளின் நோக்கம் தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதல்ல. முதலில் அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்களின் நோக்கம் எல்லாம் எவ்வாறு மக்களை ஏமாற்றி அதிகாரத்துக்கு வருவது. எப்படி எனக்குப் பின் என் வாரிசை களமிறக்கி வெற்றி காண வைப்பது.

எந்தப்பக்கத்தால் முறித்தோடி சொத்துச் சேர்க்கலாம் என திட்டம் தீட்டுவதிலேயே இவர்களின் காலம் முடிந்து விடுகிறது.

**மருது** **சில்லாலை**

**பொருட்களின் விலையேற்றம் ஏறுமுகமாயும் வேலைக்கான கூலி இறங்குமுகமாகவும் இருக்கிறதே என்ன செய்ய?**

அனைத்துப் பொருட்களுக்கான விலையும் பல மடங்கு ஏற்றப்பட்டு விட்டது. ஆனால் வேலைக்கான கூலி மட்டும் அப்படியே இருக்கிறது. அன்றாடம் கூலி வேலை செய்து உழைத்து உண்ணும் குடும்பத்தின் நிலையை எண்ணும் போது வயிறு பற்றி எரிகிறது.

மூன்று வேளை உணவுடன் இதர செலவுகள் என்பவற்றை ஒரு குடும்பத் தலைவரால் எவ்வாறு சமாளிக்க முடியும்?

கழுத்தளவு தண்ணீரில் நிற்பவருக்கும் மூக்குக்கு மேல் தண்ணீர் இருப்பவருக்கும் வித்தியாசம் உண்டல்லவா?

**மதுவன்** **மீசாலை**

**மனைவியின் கட்டுப்பாட்டில் வாழும் கணவனைப் பற்றி கூறுங்களேன் வியாசரே?**

ஒரு குட்டிக் கதை. மலையைக் கூட பிரட்டக் கூடிய பலம் பொருந்திய யானையை கட்டியிருக்கும் சங்கிலி மிகக் குறைந்த பலத்தைக் கொண்டது.

ஆனாலும் அதை அந்த யானை அதை அறுப்பதற்கு ஒரு நாளும் முயற்சித்ததே இல்லை. ஏன் தெரியுமா? அது சிறு வயதில் இருக்கும் போது அந்தச் சங்கிலியை அறுக்க முயற்சித்து முயற்சித்து இதை அறுக்க இயலாது என்ற முடிவுக்கு வந்து விடும்.

யானை வளர்ந்து பலம் பொருந்தியதாக மாறிய பின்னரும் இந்தச் சங்கிலியை அறுக்க என்னால் இயலாது என்ற எண்ணத்தை மனதில் விதைத்திருக்கும். அதனால் தான். தம்பி மதுவன் இப்போது புரிகிறதா?




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தர்மா** **மாதகல்**

**மனதிற்கு ஆறுதலா ஏதாவது கூறுங்களேன் வியாசரே?**

நம் உடல் நிலை குறித்து அக்கறையுடன் பேசுபவர்கள் உறவினர்கள் மட்டுமல்ல தம்பி.

பொலிசிபோட பேசும் இன்சூரன்ஸ் கம்பெனிக்காரர்கள் பேசும் பேச்சுக்களும் அப்படித்தான்.

ஆனாலும் ஒரு சிறு வருத்தம். இன்சூரன்ஸ் பற்றி விளக்கம் தரும் போது முதலில் கூறுவது ஒரு வேளை நீங்கள் இறந்தால்... நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால்... இந்த வார்த்தை இன்சூரன்ஸ் போடும் எண்ணத்தை சுக்குநூறாக்கி விடுகிறது.


**தமிழ்** **யாழ்ப்பாணம்**

**மாவீரர் தினம் கொண்டாட தடை ஏதும் உண்டோ வியாசரே?**

சமாதான காலத்தில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டவர்களை படையினர் அச்சுறுத்தும் போது "எமக்கு கைகள் தான் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் கண்கள் நன்றாகத் தெரிகின்றன" எனக் கூறியதான தகவல்கள் பரவியிருந்தன.

இப்போதும் அதையே தான் சொல்ல முடியும். மாவீரர்களை நினைவு கூரும் உரிமை எமக்குண்டு.

ஆயினும் அவதானமாய் செயற்படுவது மிக முக்கியமானது.



மனைவியின் கட்டுப்பாட்டில் வாழும் கணவனைப் பற்றி கூறுங்களேன் வியாசரே?

**தருஷ்** **வதிரி**

**எதற்கெடுத்தாலும் பதற்றம் அடையும் மனிதர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ஐயா?**

பதற்றம் மனிதனை நிலை தடுமாற வைத்து விடும். எடுத்ததுக்கெல்லாம் பதற்றம் அடைந்தால் காட்அற்றாக் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இப்போது பலரிடம் இருக்கும் பதற்றம் என்னவெனில் கையில் ஒரு சதம் காசு இல்லாத போது வராத பதற்றம் தொலைபேசியில் சார்ஜ் இல்லை என்ற போது வந்து விடுகிறது.

இதைத்தான் டிஜிற்றல் உலகம் என்று கூறுகிறார்கள் போல.

**சிவம்** **வதிரி**

**பொறுப்புக்கூற கால அவகாசம் வாங்கிய அரசு தமிழினத்திற்கான தீர்வை வழங்கப் போகுதாமே?**

யார் குற்றினாலும் அரிசியானால் சரி என்றொரு பழமொழி உண்டல்லவா?

அதைத்தான் இப்போது நாம் கைக்கொள்ள வேண்டும். இப்போது தமிழினத்திற்கு தேவை நியாயமான நிரந்தரமான தீர்வு.

அந்தத் தீர்வை யார் தந்தால் என்ன? எமக்கான உரிமைகள் கிடைக்கிறது எனின் ஆள் பார்த்து செயற்பட வேண்டிய தேவை இல்லை.

ஏனென்றால் சந்தர்ப்பங்களை தவறவிட்டதால் தான் தமிழினம் இலங்கையில் சிறுபான்மையினமாக இருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

**ரஸ்மிகன்** **யாழ்ப்பாணம்**

**உலகக் கிண்ண கால்பந்தாட்டங்களைப் பார்ப்பதுண்டா வியாசரே?**

வழமைக்கு மாறாக இம்முறை போட்டிகள் அனைத்தும் மிக விறுவிறுப்பாக சென்று கொண்டிருக்கிறது.

றொனால்டோ, மெஸ்ஸி போன்ற பல முன்னணி வீரர்களுக்கு அநேகமாக இது இறுதி உலகக்கிண்ண போட்டியாக இருக்கும்.

இவை அனைத்தையும் விட பலம் பொருந்திய பெரிய அணிகளை சிறிய அணிகள் அதிர்ச்சி தோல்வி அடையச் செய்யும் நிகழ்வுகளும் நடக்கத்தான் செய்கின்றன.

அண்மையில் கூட பலம் பொருந்திய ஜேர்மனியை ஜப்பான் தோற்கடித்து சாதனை படைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்
இயற்றியவர் : முத்துலிங்கம்
இசை : -எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை
தன்மானம் ஒன்றேதான் எங்கள் செல்வம்
தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை
தன்மானம் ஒன்றேதான் எங்கள் செல்வம்

ஒற்றுமையாய் பகைவர்களை
ஓட வைப்போம்
உழைப்பாலே நம் நாட்டை
உயர்த்தி வைப்போம் (2)

தாயகத்தின் சுதந்திரமே...

கோட்டையிலே நமது கொடி
பறந்திட வேண்டும்
கொள்கை வீரர் தியாகங்களை
ஏற்றிட வேண்டும் (2)

புரட்சியிலே சரித்திரத்தை
மாற்றிட வேண்டும்
பொதுவுடமை சமுதாயம்
மலர்ந்திட வேண்டும் (2)

கண் கவரும் கலைகள் எல்லாம்
வளர்ந்தது இங்கே
களங்கமுள்ள பகைவராலே
தாழ்ந்தது இங்கே
நீதியோடு நேர்மை காக்கும்
மறவர்கள் இங்கே
நிமிர்ந்தெழுந்தால் தாடகை எல்லாம்
உடைந்திடும் இங்கே

வீரமுண்டு வெற்றி உண்டு
விளையாடும் களமிங்கே உண்டு
வா வா என் தோழா
வீரமுண்டு வெற்றி உண்டு
விளையாடும் களமிங்கே உண்டு
வா வா என் தோழா
பூனைகள் இனம்போலே
பதுங்குதல் இழிவாகும்
புலி இனம் நீ எனில் வாராய்

வீரமுண்டு வெற்றி உண்டு
விளையாடும் களமிங்கே உண்டு
வா வா என் தோழா

தென்பாங்கு தென்றல் பண்பாடும் நாட்டில்
தீராத புயல் வந்ததேனோ (2)
நீர் வாழும் மீன்கள் நிலம் வீழல் போலே
நெஞ்சங்கள் துடித்திடலாமோ

வா வா என் தோழா
வீரமுண்டு வெற்றி உண்டு
விளையாடும் களமிங்கே உண்டு
வா வா என் தோழா
போதும் பாடியது

தாயகத்தின் சுதந்திரமே......

ஒற்றுமையாய் பகைவர்களை
ஓட வைப்போம்
உழைப்பாலே நம் நாட்டை
உயர்த்தி வைப்போம்

# தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே

**“ குண்டடிபட்டு குருதி கொப்பளிக்கும் போது கூட தான் கொண்ட கொள்கை மாறாது தன் இனத்தின் விடிவுக்காய் தன்னுடலை மண்ணில் விதையாக்கிய தியாகிகள் மாவீரர்கள். ”**

கார்த்திகை 27 தமிழினத்தின் மனங்களில் இருந்து என்றுமே அழிந்திடாத நாள்.

ஆம், அன்றுதான் தமிழினத்தின் விடிவுக்காக தம் உயிரைத் துச்சமாக மதித்து மடிந்து போன வீரர்களை நினைவுகூரும் நாள். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு, சர்வதேசம் என்பன பயங்கரவாத முத்திரை குத்தியிருந்தாலும் தமிழினம் மாவீரர்களை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கும். ஏனென்றால் தமிழினத்தின் உரிமை மீட்புக்காகப் போரிட்டு மாண்டு போனவர்கள் ஒன்றும் வேற்றுக்கிரகவாசிகள் இல்லை.

ஒவ்வொரு வீரனும் தமிழினத் தாயின் மகன்களே. தனது பிள்ளையை நினைவுகூர ஒரு தாய்க்கு எப்படி உரிமை இல்லாது போகும்.

தான் கொண்ட கொள்கையில் இருந்து மாறாது இறுதிவரை போரிட்டு தன்னுடலை மண்ணுக்குள் மாய்த்த அந்த ஒப்பற்ற வீரர்களை நினைவுகூருவதற்கு தடை விதிப்பது எந்த வகையிலும் அறம் அன்று.

இளமைத் துடிப்பு மிக்க வயதில் இளைஞர், யுவதிகளிடம் தம் வாழ்க்கை பற்றி எத்தனை கனவுகள் புதைந்து கிடக்கும்.

தன் வாழ்வு, தன் வேலை, தன் சொத்து என வாழ்வில் மகிழ்வாய் இருக்க வேண்டும் என்றே அந்த இளம் வயதின் கனவுகள் மலர்ந்திருக்கும்.

ஆனால் மாவீரர்களோ தமது தேசம் விடுதலை பெற வேண்டும் என்ற ஒற்றைக் கனவை மட்டும் சுமந்து கொண்டு வாழ்ந்து, அந்தக் கனவுடனேயே மடிந்தவர்கள். எப்படி அவர்களை மறந்துவிட முடியும்? எப்படி அவர்களை நினைவுகூராமல் இருந்துவிட முடியும்?

பயங்கரவாதத்தை அழித்துவிட்டோம் எனக் கூறிய பேரினவாத அரசுகள் அந்த நாளை வெற்றி விழாவாகக் கொண்டாடுவதற்கு உரிமையுண்டெனின், மடிந்து போன தன் மகனை நினைவுகூர ஏன் ஒரு தாய்க்கு உரிமை இல்லை. உலக வரலாற்றில் பல நாடுகளில் மடிந்து போனவர்களை நினைவுகூரும் உரிமை இருக்கின்ற போதிலும் இலங்கையில் இன்று வரை அது வெறும் வெற்று வார்த்தையாகவே அமைகிறது.



மாவீரர் நாள் தொடங்கியதும் மக்கள் மத்தியில் ஒரு இறுக்கமான மன நிலைமையை ஏற்படுத்த பலர் பலவித முயற்சிகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

ஏன் இந்த சிறுமைத்தனம் என்பதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை.

தற்போதைய அரசு மாவீரர் நாளை நினைவுகூருவதற்கு இடம் தந்திருந்தாலும் படையினரின் தலையீடு இருந்து கொண்டுதான் இருக்கிறது. மாவீரர் நினைவிடங்களில் சிரமதானப் பணிகளை முன்னெடுக்கும் போது அதற்கு இடையூறு இழைக்கும் வகையில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

ஒரு இனத்தை அழித்துவிட்டு அவர்களை வென்றதாய் வெற்றி விழாக்கொண்டாடும் மனநிலை கொண்டவர்களுக்கு இறந்த தம் உறவுகளை நினைவுகூர அனுமதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் வரவில்லை என்பதுதான் தமிழினத்தின் கேள்வி.

மாவீரர்கள் மடிந்து போனவர்கள். அவர்கள் தமது இனத்தின் விடிவிற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்தவர்கள்.

அவர்களை நினைவுகூருவதென்பது தமிழினத்தின் தார்மீகப் பொறுப்பு. குண்டடிபட்டு இறந்த போது கூட தன் இனத்தின் தியாகத்துக்காக தான் உயிர் மாய்க்கிறேன் என சிரித்தபடி மடிந்து போனவர்கள் மாவீரர்கள்.

அந்த ஆத்மாக்களை என்றுமே தமது இதயத்தில் ஈகைச் சுடரேற்றி தமிழினம் நினைவுகூரும் என்பது உறுதி.

இந்திர புத்திரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 800 கோடி... என்ன ஆகும் உலகம்?

**நவம்பர் 15 ஆம் திகதி அதிகாலையில் உலகின் மக்கள்தொகை 800 கோடியை அதிகாரபூர்வமாகத் தொட்டிருக்கிறது. பிலிப் பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஒரு மருத்துவமனையில் பிறந்த வினிஸ் மபன்சாக் என்ற பெண் குழந்தையை 800 கோடியாவது உலகப் பிரஜையாகக் கருதி வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.**



இந்த '800 கோடி தினத்தில்' இந்தியாவின் மக்கள் தொகை 141 கோடியே 20 இலட்சமாகவும் சீனாவின் மக்கள்தொகை 142 கோடியே 60 இலட்சமாகவும் உள்ளது. அடுத்த ஆண்டு சீனாவை முந்திக் கொண்டு 'உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு' என்ற பெருமையை இந்தியா பிடிக்கும். அதன் பின் நீண்டகாலம் அந்த இடத்தில் இந்தியா நிரந்தரமாக இருக்கும். மக்கள்தொகைப் பெருக்கத்தை நினைத்து இந்தியர்கள் கவலைப்படும் இந்த நேரத்தில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் 'மதர் ஹீரோயின்' என்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்றார். 10 குழந்தைகளுக்கும் மேல் பெற்றுக்கொள்ளும் ரஷ்யப் பெண்களுக்கு 'மதர் ஹீரோயின்' விருது வழ்ங்குவது சோவியத் கால வழக்கம்.


30 ஆண்டுகளுக்குப் பின் அந்த வழக்கத்தை மீண்டும் கொண்டுவந்துள்ள புடின், "நிறைய குழந்தை பெற்றுக்கொள்ளுங்கள்" என்று ரஷ்யர்களை வலியுறுத்துகிறார். இந்த விருதுடன் 13 இலட்ச ரூபாய் பரிசும் வழங்கப்படுகிறது. ரஷ்யாவில் பெரிய குடும்பங்களுக்கு வரிச்சலுகைகள் உண்டு.

இரண்டுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருக்கும் குடும்பங்களுக்கு பிரான்ஸ் நாட்டில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தாலியில் குழந்தை பெற்றுக்கொண்டாலே அரச நிதியுதவி கிடைக்கும். 'ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை தான்" என்ற சட்டத்தை 1979 ஆம் ஆண்டு கொண்டுவந்த சீனா, 2015 ஆம் ஆண்டு அதை இரத்துச் செய்துவிட்டது. இரண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம் என சலுகை தந்திருக்கிறது.

இப்படிப் பிறப்பு விகிதம் குறைந்துவிட்ட பல நாடுகளில் மக்கள்தொகையை அதிகரிப்பது பற்றி யோசிக்கிறார்கள். காரணம் எளிமையானது. இந்த நாடுகளில் உழைக்கும் வயதில் இருப்பவர்கள் கணிசமாகக் குறைந்து கொண்டே வருகிறார்கள். இதனால் பொருளாதார வளர்ச்சி குறைகிறது. ஓய்வு பெற்ற முதியோர்கள் அதிகரித்து விட்டனர். அவர்களைப் பராமரிப்பது அரசுக்கும் குடும்பங்களுக்கும் பெரும் சுமையாகிறது. அதேசமயத்தில் ஏழை நாடுகளில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது. உலகின் மிகவும் ஏழ்மையான 46 நாடுகளில் தான் மக்கள்தொகை வேகமாக அதிகரிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கவலைப் படுகிறது. இந்தியா அந்தக் கவலைப்பட்டியலில் இல்லை. ஆனால், மக்கள் தொகை என்பது இங்கு தொடர்ச்சியாக விவாதப் பொருளாகவே இருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத், "குடும்பக் கட்டுப்பாடு என்பதை எல்லாச் சமூகங்களுக்கும் ஒரே மாதிரி அமுல்படுத்த வேண்டும்" என்று சமீபத்தில் கூடப் பேசினார். இந்தியாவில் இஸ்லாமியர்களின் மக்கள்தொகை பெருகி வருவதாகத் தொடர்ந்து பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. மத்திய சுகாதாரத் துறையின் தேசிய குடும்பநல ஆய்வுப் புள்ளி விபரங்களைச் சுட்டிக் காட்டிப் பல நிபுணர்கள் இதை நிராகரித்தாலும் இந்தப் பிரசாரம் நிற்கவில்லை.

இன்னொரு பக்கம் பல மாநிலங்கள் தனியாக குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான சட்டங்களை இயற்றுகின்றன. அசாம் மாநிலத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்களுக்கு அரச வேலை கிடைக்காது. உத்தரப்பிரதேசத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருப்பவர்களுக்கு அரச நல உதவிகளை நிறுத்திவிடும் ஒரு மசோதா பரிசீலனையில் இருக்கிறது.




மக்கள்தொகை பெருகும்போது இரண்டு விதமான விளைவுகள் ஏற்படக்கூடும். சிங்கப்பூர், தென்கொரியா போன்ற நாடுகள் மக்கள்தொகை அதிகரித்தபோது, அதைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தின. அதனால் முன்னேறின. நைஜீரியா, காங்கோ, தான்சானியா போன்ற ஆபிரிக்க நாடுகள் பிரச்சினையில் தவிக்கின்றன. அடித்தட்டு மக்களுக்கு எதுவும் கிடைக்காத போது வறுமை, பஞ்சம், வேலைவாய்ப்பின்மை, நோய்கள் போன்றவை அதிகரிக்க வாய்ப்புண்டு. இளைய தலைமுறையினருக்கு வாய்ப்புகள் கிடைக்காத காரணத்தால் துனிஷியா, எகிப்து, சிரியா போன்ற நாடுகளில் கலகங்களே ஏற்பட்டன.

'மக்கள்தொகையில் உலகின் நம்பர் 1 நாடு" என்ற அடையாளம் முக்கியமானது. சீனாவுக்கு இது கிடைத்தபோது, அது தன் மனிதவளத்தைப் பயன்படுத்தி உலகின் உற்பத்தி கேந்திரமாக உருவெடுத்தது. இன்றும் அந்த இடத்தில் அது இருக்கிறது. இவ்வளவு மக்கள்தொகை இருக்கும் ஒரு நாடு, உலகின் மிகப்பெரிய சந்தையாகவும் மாறும். எந்த ஒரு பொருளுக்கும் உலகிலேயே அதிக வாடிக்கையாளர்கள் கிடைக்கும் ஏரியா அது. சீனா இந்தச் சந்தையைப் பன்னாட்டு நிறுவனங்கள் தொடாமல் பார்த்துக் கொண்டு, உள்ளூர் நிறுவனங் களை உருவாக்கியது.

**நூறு கோடிகளின் உயர்வு!**

மனித இனம் தோன்றியது முதல் மக்கள் தொகை பெருகி 1803 ஆம் ஆண்டு 100 கோடி எண்ணிக்கையைத் தொட்டது. அதன்பிறகு வேகமான வளர்ச்சி. 800 கோடியை எட்டிய வேகம் இதோ:

ஒவ்வோர் ஆண்டும் இறப்பு விகிதத்தைவிட பிறப்பு விகிதம் அதிகமாக இருக்கிறது. 2021 ஆம் ஆண்டில் 13 கோடியே 40 இலட்சம் குழந்தைகள் பிறந்தன. 6 கோடியே 90 இலட்சம் பேர் இறந்தார்கள். அந்த ஆண்டில் மக்கள்தொகை 6 கோடியே 90 இலட்சம் உயர்ந்தது. அடுத்த சுமார் 30 ஆண்டுகளுக்கு இப்படி 13 முதல் 14 கோடி குழந்தைகள் ஆண்டுதோறும் பிறக்கக்கூடும் என்கிறார்கள். 2050இற்குப் பிறகு பிறப்பு விகிதம் குறையும். அதேநேரத்தில் உலகின் மக்கள்தொகை முதுமையடைந்து கொண்டே வருவதால், இறப்பு விகிதம் அதிகரிக்கும். 2100ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு கட்டத்தில் இரண்டு எண்ணிக்கையும் சமமாகும்; அப்போது மக்கள்தொகை பெருகாமல் நின்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிக்கின்ற இளமை...!

பள்ளி முன்வெளியில்
பட்டங்கள் ஏற்றியதும்...

எருக்கலைப் புதர்களிடை
மிதிவண்டி செலுத்தியதும்...

ஆட்டுக்குப் புல் தேடி
தோட்ட வழி திரிந்ததுவும்...

பொன் வண்டுகள் பிடிக்க
கிளுவை பல கண்டதுவும்...

மித்திரன் பத்திரிகை
கதை படிக்கத் துடித்ததுவும்...

வானொலியே துணையாக
பாயிருந்து படித்ததுவும்...

தென்னை மட்டை கொண்டு
துடுப்பாட்டம் ஆடியதும்...

ரியூட்டறியே அறியாமல்
வாசித்து களித்ததுவும்...

இப்போதும் நினைக்கையிலே
இனிக்கிறதே மனமே!



இரா.ஜெயக்குமார்

## விடியலை நோக்கிய பயணத்தில்...



அலைகள் கடலில் ஓய்வதில்லை
அறிவும் மனிதனில் மாழ்வதில்லை!
ஏணிப் படியாய் வாழ்வில் முன்னேற
ஏற்றத்தை நோக்கி பயணிக்கிறோம்.

எதிர்காலம் கனவு கண்டு-எமக்கான
கல்விக்குள் பிரவேசித்தோம்
எடுத்தோம் சிறந்த சித்திகள்-ஆனாலும்
பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை!

ஆறறிவு படைத்த மனிதனின் மனதில்
ஆழ்கடலில் பேரலை தோன்றுவது போல்!
எழுச்சியை நோக்கிப் பயணிக்க-இன்னொரு
பட்டப்படிப்பிற்காய் கல்லூரிக் கதவைத் தட்டியது

படித்தோம் படித்தோம் பக்குவமாய் படித்தோம்
வாழ்வதனில் முன்னேறும் மேலான எண்ணத்துடன்.
பாசமிகு அம்மம்மாவின் ஆறுதலுடன்- பரீட்சை
முடிந்ததும் பயிற்சிகான் திருப்பு முனையில்...!
சாதிக்க தூண்டினார் எம் உறவுகள்
சாதிக்க நினைத்தது மனதில் ஒருபுறம்!
பிரிந்த நம் உறவுகளின் ஆசீர்வாதம் மறுபுறம்
விடியலை நோக்கிப் பயணிக்க விடிவெள்ளி தோன்றியது

எஸ். ஜாழினி,
நாவலடி,
வரணி.

## மடம் பிடித்தான் மனிதன்

ஓ மனிதா என்ன இது ஆழ்சிந்தனை

சூரியக்கதிர்களை சுவைத்த

பச்சயத் தருக்களை பரீட்சயம் போல்

அழித்துவிடு அப்படியே விட்டுவிடாதே

சூழலுக்கு கரியமில வாயுக்கள்

போதாதாம் அதனால்தான்

இன்னும் கொஞ்சம்

நலம்வாழ முடிகின்றது போல

காத்திருக்காதே

சுட்டுக் கருக்கி

கரியமில வாயுக்களை

காற்றிலே கலந்துவிடு...

சிரித்துக் கொண்டே அழுகின்றது இயற்கை...

ஓட்டகங்கள் உன்னிடம் தான்

கற்றுக் கொண்டதோ என்று...

ச.பிரம்மியா.

## மௌனத்தின் தேடல்- 585



## நேசிப்பும் யோசிப்பும்

ஒருபோதும் சிறிதும்
துயரப்படாதவர்களை
இறைவன் நேசிப்பதில்லை
இதற்கு நேர்மறையாய்
விலை கொடுத்தாலும்
திரும்பப் பெற முடியாமல்
உறவுகளை பறிகொடுத்து
ஊண் உறக்கமின்றி
பரிதவிப்பவர்களின்
நிலையை நினைத்தால்
வலி தாங்க முடியவில்லை
வழியும் புலப்பட வேண்டும்

க.சாரங்கன்
சாவகச்சேரி

## மௌனத்தின் தேடல்- 586



வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்

## தாயகக் கனவுகள்...?

பெற்ற தாயின் புலம்பல் ஓலமும்
கல்லறை மீது அவள் கொட்டும் கண்ணீரும்
காட்சிப் பொருளாய் மாறி விட்டதோ!
இளைஞரை போதை இங்கு ஆட்சி செய்ய
வாள்வெட்டு, வல்லுறவு, கொலை,தற்கொலை
பத்திரிகையின் நாளாந்த செய்தியாகிறது
மாவீரனே! உன் தாயகக் கனவுகள்...?

பிரமன், கொக்குவில்.

## அதிகார வெறி

தமிழர் தம் நிம்மதிக்காய்
இளமைக் கனவுகள் துறந்து
தியாக வேள்வியில் ஆகுதியாகி
நிரந்தரமாய் துயிலும் செல்வங்களே
உசுப்பேற்றும் ஆதிக்கத் திமிரா
உம் தியாகத்தில் குளிர்காய்ந்து
அதிகாரம் செய்ய இன்னும்
முட்டி முரண்படுவதைப் பார்த்து
அழுவது தான் விதியா?

சி.இ.அன்புதுரை,
சம்மட்டி ஒலை,
மானிப்பாய்.

## தட்டத்தில் தமிழீழம்

எழுபத்தைந்தாண்டு தயாரிப்பில்
உருவாகிறது; தட்டத்தில் ஈழம்
வழங்குநர்–ஜனாதிபதி

பிரகவி,
கொக்குவில்.

## மண் மீட்பில்

மண் பீட்பில் மகிழ்ந்து
மனம் வைத்த மறவனுக்கு
கண்ணீரால் அஞ்சலித்துக்
கதறி அழும் தாய் உடலில்
மண்ணீரல் கறைந்து கையில்
மரணத்தை தினம் தாங்கி
மன்றாடும் நிலை இதுவோ...

வைகதன்,
கொக்குவில்.

## கருவறையின் கதறல்

வீரத்தாய் பெற்றெடுத்த வீர வேங்கையே
விடிவுக்காய் போராடப் போர்க்களம் சென்றவனே
மண்ணின் பெருமைதனை உணர்த்திச் சென்ற உன்னை
மண்டியிட்டு மாலை சாத்தி வணங்குகின்றேன்.

ஆ.செல்வி,
[illegible]

## வீர வணக்கம்

வீரப் பரம்பரையில் வீறு கொண்டு எழுந்து
நாட்டைக் காக்க வீட்டுக்கொரு வீரனாய்
ஈழக் கனவுடன் களமாடினாய்
விடுதலை வேட்கைக்கு உரமாயினாய்

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## குறுக்கே புகுந்த குறுவாள்

காலத்தின் பதிவு 42

"அத்தனை கொடியவனா நீ?" என்று மீண்டும் கேட்டான் இளையபல்லவன்.

இதைக் கேட்டபோது இளையபல்லவன் குரலில் ஏளனம் இருந்ததை வில்வலன் கவனிக்கத் தவறவில்லை. அவனும் விஷமமாகப் பேசத் துவங்கி, "நான் மட்டுமல்ல, என் வாளும் கொடியது" என்று தன் கச்சையில் இருந்து தொங்கிய நீண்ட வாளைத் தட்டியும் காட்டினான்.

"குறுவாளைப் போலவே கொடியதா?" என்று வினவினான் இளையபல்லவன்.

தன் குறுவாள் பயனற்றுப் போனதைக் கண்டதால் ஏற்கனவே சீற்றமடைந்திருந்த வில்வலன், அதைப் போலத்தான் தன் பெருவாளும் இருக்கும் என்பதை இளையபல்லவன் சுட்டிக் காட்டியதும் சீற்றத்தின் எல்லையை அடைந்தான். "பேச்சிலுள்ள சாமர்த்தியம் உனக்குச் சண்டையில் உண்டா?" என்று வினவவும் செய்தான் வில்வலன் சீற்றத்தால் துடித்த உதடுகளுடன். "அதைப் பரீட்சிக்க ஆசையாயிருக்கிறதா உனக்கு?" என்று மீண்டும் அமைதியுடன் வினவினான் இளையபல்லவன். "ஆம் ஆசையாயிருக்கிறது" என்றான் வில்வலன்.

"அப்படியானால் இப்படி வா" என்று வில்வலனைத் தன்னருகில் அழைத்த இளையபல்லவன், "இப்படி உட்கார்" என்று ஓர் இடத்தையும் அவனுக்குக் காட்டினான். "எதற்கு உட்கார வேண்டும்?" "நடனம் முடியட்டும். நல்லதொரு நிகழ்ச்சியை மற்றவர்கள் அனுபவிப்பதை நாம் கெடுக்க வேண்டாம். நடனம் முடிந்த பின்பு உன் ஆசையை நான் தீர்த்து வைக்கின்றேன்."

இதைக் கேட்டதும் ஏதோ யோசித்த வில்வலனைப் பார்த்து நகைத்த இளையபல்லவன், "முதுகுப் புறத்தில் குறுவாள் எறியும் பரம்பரையில் பிறந்தவனல்ல நான். பயப்படாதே வா" என்றான்.

அந்தச் சொற்களால் வெட்கம் உள்ளத்தை வாட்ட சீற்றம் தலைக்கேறத் தனது சகாக்களை விட்டுப் பிரிந்து வந்த வில்வலனைத் தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்ட இளைய பல்லவன், "நடனம் துவங்கட்டும்" என்று மஞ்சளமுகியை நோக்கிக் கூறினான்! சுபத்திரையின் காதல் நடன நாடகம் மீண்டும் துவங்கி மகிழ்ச்சியுடன் முடிந்தது. அது முடிந்த மறு விநாடி அந்தக் கடற்கரை மணலில் துவங்கியது ஒரு கோர நாடகம்.

### முடியாத விழா

மக்களை அடக்கி ஆளும் திறனுள்ளவர்கள் உலகத்தில் சிலர்தான் தோன்றுகிறார்கள். அவர்கள் எந்த இனத்தில் தோன்றுகிறார்கள், எந்த இடத்தில் தோன்றுகிறார்கள், ஏன் தோன்றுகிறார்கள் என்று திட்டமாகச் சொல்ல முடியாவிட்டாலும் உலகத்தில் சில பெரும் சாதனைகளைச் செய்யப் பிறக்கிறார்கள் என்று மட்டும் சொல்லலாம்.

அத்தகைய மனிதர்கள் உலகத்தின் வரலாற்றில் புத்தம் புது நிகழ்ச்சிகளைத் தீட்டுகிறார்கள். காலம் மறவாத கதைகளைச் சிருஷ்டித்துவிட்டுச் செல்கிறார்கள். அவர்களுக்கென ஆண்டவன் ஏதோ அபூர்வ சக்தியை அளிக்கின்றான். அந்தச் சக்தியால் வலுவடைகின்றன அவர்கள் செயல்கள்.

தமிழகத்தின் வரலாற்றில் பொன் கதையொன்றைப் புனைந்து பேரிலக்கியமொன்றும் உருவாக வாய்ப்பளித்த கருணாகர பல்லவன் அத்தகைய அபூர்வ சக்தி வாய்ந்தவன் என்பதை அக்ஷய முனைக் கோட்டைத் தலைவனான பலவர்மன் சித்திரா பௌர்ணமியின் அந்த இரவில் சந்தேகத்துக்கு இடமின்றி உணர்ந்து கொண்டான்.

அந்தக் கடற்கரை மணலில் எத்தனையோ நடனங்களை நடத்தியிருந்தாலும் நடனங்களை சாக்காக வைத்துக் கொண்டு எத்தனையோ காரியங்களைச் சாதித்திருந்தாலும் எத்தனையோ பேர்வழிகளைப் பழி வாங்கியிருந்தாலும் மற்ற ஆண்டுகளின் நடனங்களுக்கு வந்த உறுதியுடன் திடசித்தத்துடனும் அன்றைய இரவு நடனத்துக்குப் பலவர்மன் வரவில்லை.

(தொடரும்...)

# உலகின் இயற்கை அதிசயங்கள் ஏழு-பகுதி 1



அமேசான் ஆற்றுப் படுக்கைகளில் இருக்கும் மரங்கள் ஒரு நாளில் மட்டும் வெளியிடும் நீராவியின் மொத்த எடை பல ஆயிரம் கோடி தொன் என மதிப்பிடப்படுகிறது. இந்த நீராவி ஆறு, ஆர்ஜெண்டினா, உருகுவே, பராகுவே, வெனிசுலா, கயானா, சுரிநாம் என பல நாடுகள் மீது பரவியுள்ளது. அமெரிக்கா, பிரேசில் மற்றும் தென் அமெரிக்கா நாடுகளில் பெருமளவு மழை பெய்ய இந்தப் "பறக்கும் ஆறு" தான் காரணம் என்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அமேசான் காடுகளுக்குள் புகும் வெளியுலக மனிதர்கள் திடீரென மாயமாக மறைவதற்குக் காரணம் இந்த பறக்கும் ஆறுதான் என அஞ்சப்படுகிறது.

இந்தப் பறக்கம் ஆறுகள் பற்றி இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜெராட் மோஸ் என்பவர் தனது மனைவி மார்கி மோஸ் என்பவருடன் கிளைடர் விமானத்தில் பயணித்து உறுதிப்படுத்தி இருக்கிறார். ஜெராட்தான் உலகை கிளைடர் மூலம் வலம் வந்து சாதனைப் படைத்தவர். பிரேசில் அரசு ஜெராட் உடன் சூழலியல் விஞ்ஞானிகள் சிலரை இணைத்து இந்த பறக்கும் ஆறுகள் குறித்த ஆய்வினை நடத்தி இருக்கிறது.

இருட்டையே தன் நிறமாகவும் வனப்பையே தன் இயல்பாகவும் அதிசயங்கள், அற்புதங்கள் புதைந்திருக்கும் பொக்கிஷமாகவும் கொண்ட அமேசான் காடுகள் இன்னமும் முழுமையாக அறியப்படாத பேரதிசயம் என்று உலகம் முழுக்க ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. எனவே இந்தப் பட்டியலில் முதலிடம் பெற முழுத் தகுதியும் எதிர்ப்பாய் ஒரு குரலும் எழாத உறுதியான ஆதரவையும் பெற்றது அமேசான் காடு.

### இகுவாசு அருவி

தென் அமெரிக்க நாடுகளான ஆர்ஜெண்டீனாவுக்கும் பிரேசிலுக்கும் அவற்றின் எல்லைகளை நீரால் பிரிப்பது போன்ற எழில் ஓவியம் தான் இகுவாசு அருவி. உண்மையில் அருவிகள் என்றுதான் குறிப்பிடவேண்டும்.

ஏனென்றால் சிறியதும் பெரியதுமாக சுமார் 270 அருவிகளின் தொகுப்பு தான் இகுவாசு அருவி. இகுவாசு என்றால் குவாரணி என்னும் தென் அமெரிக்க பிராந்திய மொழியில் "ஒலிக்கும் பாறை" என்று பொருள். நீர்வீழ்ச்சியின் வேகத்தில் அதன் துளிகள் பாறை மீது தாளமிடுவது போல ஒலிப்பதால் இந்தப் பெயர்.

இகுவாசு அருவி என்பது பரானா ஆற்றிலிருந்து பிரேசிலின் கோர்ட்டிபா நகரில் பிரிந்து பரானா பீடபூமியின் உயரமான முகடுகளில் ஏறும் போது இகுவாசு அருவியாக உருமாற்றம் அடைந்து ஆர்ஜெண்டீனா நாட்டின் எல்லைப் பகுதியில் பிரிந்து விழுகின்றது. இன்னொரு புறம் பராகுவே நாட்டின் ஒரு பகுதியும் அங்குதான் சந்திக்கின்றது. மூன்று தேசத்தின் எல்லைப் புறம் என்பதால் மூன்று நாட்டினரும் சுற்றுலா நிமித்தமாக ஒரே இடத்தில் சங்கமிக்கின்ற அற்புதமான வாய்ப்பினை இகுவாசு அளிக்கின்றது.

இகுவாசு அருவியின் முதன்மை நீர்வீழ்ச்சி 150 மீற்றர் அகலமும் 700 மீற்றர் நீளத்திலுமாக விழுகின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல் 318
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# அதிகரித்து வரும் புற்றுநோய்த் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்க

மருத்துவ உலகில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விருத்தியானது மனிதனது ஆயுள் எதிர்பார்ப்பில் அதிகளவு நீட்சியினை ஏற்படுத்தியிருப்பினும் தற்காலத்தில் உயிர்க் கொல்லி நோய்களுடனான மனிதனது போராட்டங்கள் அதிகரித்து வரும் போக்கினையே காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய உயிர்க்கொல்லி நோய்களில் புற்றுநோயானது முக்கியமான ஒன்றாகக் காணப்படுவதுடன், இந் நோய்த்தாக்கமானது உலகெங்கும் பல்வேறு வயதுப்பிரிவினரிடையே அதிகரித்துவரும் போக்கினை அவதானிக்கலாம். இலங்கை இதற்கு விதிவிலக்கானதல்ல.

புற்றுநோயானது அண்மைக்கால வரலாற்றினைக்கொண்ட ஒரு நோயல்ல. இது கி.மு 2250களில் காணப்பட்டிருப்பதற்கான அடையாளங்கள் எகிப்திய பிரமிட்டுக்களிலிருந்து எடுக்கப்பட்ட மனித உடல்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளியாகியுள்ளது.

புற்றுநோய் எவ்வயதுப் பிரிவினரையும் தாக்கலாம். எத்தகைய வாழ்க்கைத்தர நிலையிலுள்ளவர்களையும் தாக்கலாம். ஆயினும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வின்மையே இந் நோய்த் தாக்கத்திலான அதிகரித்து வரும் இறப்புக்களுக்குக் காரணமாக அமைகின்றது. இத்தகைய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானது.

புற்றுநோய் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக அமையலாம். இக்காரணிகளை பௌதீக, இரசாயன, உயிரியல் மற்றும் பரம்பரை அலகு காரணிகள் என வகைப்படுத்துவர். பௌதீக காரணிகளில் சூரியக்கதிர்கள் மற்றும் UV கதிர்களிலான தாக்கம் முக்கியமானது.

இரசாயன காரணிகளில் சிகரெட், பீடி, சுருட்டு முதலானவற்றிலுள்ள நச்சுப்பதார்த்தங்கள், மதுபானம், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை முதலானவை முக்கியமானவை.

உயிரியல் காரணிகளில் Human Papillomo virus, (HPV) வைரஸ்கள் மற்றும் எப்ஸ்டீன் பார் வைரஸ் (Ebstain Bra Virus), எயிட்ஸ் வைரஸ் (HIV) போன்ற வைரஸ்களின் தாக்கம் முக்கியமானது.

இவற்றில் HPV வைரஸானது கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய்க்குக் காரணமாக் அமைவதுடன் இவ் வைரஸ்க்கள் முறைகேடான பாலியல் தொடர்புகளினால் கடத்தப்படுகின்றன.

புற்றுநோய்களை ஏற்படுத்தும் காரணிகளில் சில மனிதனால் கட்டுப்படுத்தக்கூடியனவாகவும் சில கட்டுப்படுத்த முடியாதனவாகவும் காணப்படுகின்றன. கட்டுப்படுத்தக்கூடிய சில காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கருதலாம்.

புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், முறைகேடான பாலியல் தொடர்புகள், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை பாவனை இவை மனிதனால் கட்டுப்படுத்த இயலுமான காரணிகளாகக் காணப்படுவதனால் இத்தகைய பழக்க வழக்கங்களைத் தவிர்ப்பதன் மூலம் இவை ஏற்படுத்தும் புற்றுநோய் தாக்கத்திலிருந்து எம்மைப்பாதுகாக்க முடியும்.

உதாரணமாக புகைப்பிடித்தலினால் மூக்கு, வாய்க்குழி, குரல்வளை தொண்டை, களம், நுரையீரல், ஈரல், சதையம், வயிறு, சிறுநீரகம், சிறுநீர்ப்பை, பெருங்குடல், சூலகம், கர்ப்பப்பைக்கழுத்து, எலும்பு மச்சை முதலான அவயவங்களில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம்.



மதுப் பாவனையால் வாய், தொண்டை, குரல் வளை, களம், ஈரல், மலக்குடல் மற்றும் மார்பகம் முதலிய அவயவங்களில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம். வெற்றிலை,பாக்கு மற்றும் சுண்ணாம்பு பாவனையால் வாய் மற்றும் களப் பகுதிகளில் புற்றுநோய்த்தாக்கம் ஏற்படலாம்.

இலங்கையின் வடமாகாணத்தில் அதிகரித்து வரும் புற்றுநோய்த் தாக்கமானது முறையே வாய், தொண்டைக்குழி, மார்பகம், தைரொயிட் சுரப்பி, கர்ப்பப்பைக் கழுத்து, பெருங்குடல், நுரையீரல் முதலானவை தொடர்பாகக் காணப்படுகின்றது.

ஆயினும் புற்றுநோய்க்கான ஆரம்ப நிலையிலான அடையாளங்கள் பற்றி அவதானமாக இருந்துகொண்டு நோயினை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்தலாம். அதாவது வாய்ப்புற்று நோயைப் பொறுத்தவரையில் வாயில் ஏதேனும் அசாதாரண வளர்ச்சி காணப்படுமிடத்து அது எத்தகைய நோவினையும் ஏற்படுத்தாத பட்சத்திலும் மருத்துவ ஆலோசனையினை உடனடியாக நாடுவது நோயினை ஆரம்ப நிலையிலே கட்டுப் படுத்த வழிவகுக்கும்.

இதற்கு கண்ணாடியின் முன்னின்று வாயினை அடிக்கடி பரிசோதிப்பது அவசியமானது. இதுபோல மார்பகப்புற்று நோயினை மார்பிலுள்ள கட்டிகள், முலைக்காம்பினூடாக நீர் வடிதல், குழி விழுதல், உள்ளிழுக்கப்பட்ட முலைக் காம்பு, தோலில் ஏற்படும் மாற்றங்கள் முதலான அறிகுறிகளால் அடையாளப் படுத்தலாம். குறிப்பாக 45 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மார்பகப்புற்று நோய்க்கான திரையிடலை இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மமோகிராம் முறைமூலம் மார்பகப்புற்று நோயினை அறிகுறிகளே இல்லா ஆரம்பநிலையில் கண்டுபிடிக்கலாம்.

ஆயினும் இலங்கையின் அரச மருத்துவமனைகளில் எத்தகைய சேவைகள் புற்றுநோய்க்கான அறிகுறிகள் அல்லாத குறித்த வயதுப்பிரிவு சார் அனைத்துப் பெண்களுக்கும் இன்னமும் வழங்கப்பட முடியாத நிலை உள்ளதால் 20 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப்பெண்களும் மாதமொரு தடவையேனும் சுயமார்பகப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் நோயின் அறிகுறிகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பொருத்தமான சிகிச்சை மூலம் நோயைக் குணமாக்கலாம்.

இதுபோலவே கர்ப்பப்பை கழுத்து புற்றுநோயானது மாதவிலக்கு நின்ற பின்னான உதிரப்போக்கு, மாத விலக்கின் போதான கடும் உதிரப்போக்கு மற்றும் துர்நாற்றமான திரவப்போக்கு முதலான அறிகுறிகளால் அடையாளப் படுத்தப்படலாம். இப்புற்று நோய்க்கான திரையிடல் பரிசோதனை PAPsmear எனப்படும் இச் சேவையானது இலங்கையில் ஒருசில அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளிலேயே பெறப்படலாம்.

இதற்கு மாற்றீடான வேறு திரையிடல் பரிசோதனை முறைகள் மூலம் கர்ப்பப்பை கழுத்து புற்றுநோயினை அடையாளப்படுத்தும் முறையானது தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது வருங்காலத்தில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும். மேலே கூறப்பட்டது போல ஏனைய புற்றுநோய்களுக்கு ஆரம்ப அறிகுறிகள் உள்ளன. களப்புற்று நோய்க்கு அறிகுறியாக உணவு விழுங்குவதில் சிரமங்கள் அமையலாம். குடல் மற்றும் குதப்புற்றுநோய்களுக்கு மலச்சிக்கல், மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், மலம் தார் போன்ற கரிய நிறத்துடன் காணப்படல், குருதிச் சோகை மற்றும் வயிற்று வலி முதலானவை அறிகுறிகளாக அமையலாம்.

ஆயினும் பொதுவாகக் கூறுமிடத்து மேற்கூறிய அறிகுறிகள் தவிர்ந்து வேறு அறிகுறிகள் அதாவது பசியின்மை, காரணமற்ற உடல் எடை குறைவு, தொடர்ச்சியான காய்ச்சல், வீக்கங்கள் அல்லது கட்டிகள், தொடர்ச்சியான இருமல், சளியுடனான இரத்தப் போக்கு மற்றும் அதிகாலையில் ஏற்படும் தலைவலி முதலான அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்கு மேலாக நீடித்தால் மருத்துவ ஆலோசனை பெறப்பட வேண்டும். ஏனெனில் இவையும் புற்றுநோய்க்கான ஆரம்ப அறிகுறிகளாக அமையலாம்.

தற்காலத்தில் அதிகரித்து வரும் புற்றுநோயானது ஒரு சாபக்கேடான வியாதியோ அல்லது சரும வியாதியோ அல்ல. ஆகவே புற்றுநோயிலிருந்து எம்மை பாதுகாப்பது எமது தலையாயக் கடமையாக அமைவதுடன் புற்று நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு ஒரு சமூகமாக எம்மாலியன்ற அனுசரணையை வழங்குவது இச் சமூகம் சார்பான ஒவ்வொருவருக்குமுரியதுமான அழைப்பாகும்.

நாம் எமது சமூகத்திடம் வேண்டிக் கொள்வது பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுசரணை வழங்குவோம். நோயுடன போராடிக் குணமானவர்களை மெச்சுவோம். நோயினால் மரித்தவர்களைக் கனம் பண்ணுவோம்.

மருத்துவ கலாநிதி
கிரிசாந்தி இராஜசூரியர்
விசேட புற்றுநோய்
மருத்துவ நிபுணர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரேசில் நாட்டில்
# பாடசாலைக்குள் புகுந்து மர்மநபர் துப்பாக்கிச் சூடு
## மூவர் உயிரிழப்பு

(பிரேசிலியா)


பிரேசில் நாட்டில் இராணுவ உடையில் ஆயுதமேந்திய நபர் 2 பாடசாலைகளில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளதோடு, 11 பேர் காயமடைந்துள்ளனர்.

பிரேசில் நாட்டின் எஸ்பிரிடோ சான்டோ மாகாணத்தில், தலைநகர் விடோரியாவில் இருந்து 50 மைல்கள் வடக்கே அராகுரூஸ் என்ற சிறிய நகரில் இராணுவ உடை மற்றும் முகமூடி அணிந்து வந்த மர்மநபர் ஒருவர் இரண்டு பாடசாலைகளில் திடீரென புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தி உள்ளார்.

இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர், 11 பேர் காயமடைந்து உள்ளனர். இதனை மாகாண ஆளுநர் ரெனேட்டோ காசாகிராண்ட் உறுதிப்படுத்தி உள்ளார். இதில் உயிரிழந்தவர்களின் நினைவாக 3 நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும், தொடர்ந்து விசாரணை நடத்தி, விரைவில் புதிய விபரங்கள் வெளியிடப்படும் என தெரிவித்துள்ளார்.

எனினும், தாக்குதல் நடத்திய நபருக்கு 16 வயது இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த இரட்டை தாக்குதலுக்கு பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா இரங்கல் தெரிவித்துள்ளார். (4)

# உலகின் உயரமான குடியிருப்பு கட்டடத்தை அமைக்கும் துபாய்



(அபுதாபி)

உலகின் உயரமான குடியிருப்பு கட்டடம் துபாயில் கட்டப்பட்டு வருகிறது.

இந்நிலையில் குறித்த கட்டடம் எப்போது திறக்கப்படும் என அறிவிக்கப்படவில்லை.

100 மாடிகளைக்கொண்ட இக்கட்டடம் 'ஹைபர் டவர்' என அழைக்கப்படுகிறது.

இதன் உயரம் இன்னும் வெளியிடப்படவில்லை. தற்போது துபாயில் 1289 அடியில் உயரமான குடியிருப்பு கட்டடம் உள்ளது.

உலகின் உயரமான குடியிருப்பு கட்டடமாக அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள சென்ட்ரல் பார்க் டவர் (1550 அடி) இதுவரை உள்ளது.

அதை விட உயரமாக ஹைபர் டவர் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உலகின் உயரமான கட்டடம் புர்ஜ் கலிபா (2716 அடி) துபாயில் தான் உள்ளது. இது வணிக பயன்பாட்டுக்கானது. (4)

# கொரோனாவிற்கு பின்னர் மக்கள் மத்தியில் சோம்பல்

(பரிஸ்)

பிரான்ஸில் கொரோனாத் தொற்றுக்கு பின்னர் மக்கள் மத்தியில் புதுவிதமான பிரச்சினை ஒன்று ஏற்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றிற்கு முன்பு இருந்ததனை விடவும் தீவிரமான சோம்பேறித்தனம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரான்ஸின் பிரபல ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வினை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, கடந்த 11 ஆம் திகதி வெளியாகிய அறிக்கைக்கமைய, தொற்றுநோய்க்குப் பிறகு, பிரான்ஸ் மக்கள் தீவிரமான சோம்பேறிகளாக இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடிக்கு முன்னர் இருந்ததனை விடவும் 30 சதவீதமே சுறுசுறுப்பாக இயங்குவதாக இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை இளைஞர்களிடையே அதிகமாக அதிகரித்துள்ளதென குறிப்பிடப்படுகின்றது.

25 முதல் 34 வயதுடையவர்களில் 40 சதவீதம் பேரும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 21 சதவீதமானவர்களுடன் ஒப்பிடும் போது, கொரோனா காலத்திற்கு முன்னர் இருந்ததனை விடவும் மிகவும் சோம்பேறித்தனமாக செயற்படுவதாக தெரியவந்துள்ளது. (4)

## மின்வெட்டால்
# உக்ரைனில் 60 லட்சம் குடும்பங்கள் பாதிப்பு

(கீவ்)

உக்ரைனில் உள்ள மின் நிலையங்களை குறி வைத்து ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாக உக்ரைனின் முக்கியமான உட்கட்டமைப்பைத் தாக்க ரஷ்யா டிரோன்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருகின்றது.

உக்ரைன் மின் நிலையங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியை ரஷ்யா அழித்துள்ளது. இதனால் உக்ரைனில் பல பகுதிகளில் மிகப் பெரிய அளவில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.



இந்த நிலையில், நாட்டில் 60 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இன்னும் மின்வெட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார். (4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா:88 சூரி 9 செவ் 8 இல்<br>உயரம்:4' 5"<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13157 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: சூரி, செவ் 3 இல்<br>உயரம்: 159 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/11241 |
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 23 ¾ சூரி 11 செவ் 8 இல்<br>உயரம்:154 cm<br>தகைமை/தொழில்: BSc பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/13160 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: சூரி 3 செவ் 2 இல்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில் : MIT தனியார்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/11247 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 25 சூரி 7 செவ் 10 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13161 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: சூரி, செவ் 6 இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: ACCA, கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/11249 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 13 சூரி, செவ் 6 இல்<br>உயரம்:162 cm<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர்,பொறியியலாளர்<br>தொ.இ: B/13165 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 29 சூரி 4 செவ் 2 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BA,MA பரதநாட்டியம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/11254 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

வறுமையும், வன்முறையும் பெரிதும் தாக்குவது பெண்களையே. வறுமை ஒழிப்போம்! வன்முறை தடுப்போம்!
சமத்துவமான சமுதாயத்திற்காக ஒன்றுபட்டு உழைப்போம்!

யாழ் சமூக செயற்பாட்டு மையம் Jaffna Social Action Center (JSAC)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றுபடுங்கள்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து

(கொழும்பு)

**பொருளாதார பாதிப்புகள் தீவிரமடையும் போது மக்களின் போராட்டங்களும் தீவிரமடையும். மேலும் போராட்டங்கள் வலுப்பெறும் போது நாட்டில் நெருக்கடிகள் தலைதூக்கும். நெருக்கடிகளை தீர்ப்பது நாட்டுத் தலைவர்களுடைய பொறுப்பாகும். எனவே நாட்டை நெருக்கடியிலிருந்து மீளக் கட்டியெழுப்ப ஊழல் மற்றும் மோசடிகளை நிறுத்தி விட்டு அனைவரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**

பவ்ரல் அமைப்பின் மாற்றத்திற்கான பாதை பெண்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் என்பது எங்களால் உருவாக்கப்படுவதில்லை. நாட்டினால் உருவாக்கப்படும் ஒன்றாகும். மேலும் நாட்டை மீட்கக்கூடிய தரப்பினருக்கு நாம் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டும். அவர் இவரை சாடுகிறார். இவர் அவரை சாடுகிறார். ஆனால் நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பில் எவரும் கூறவில்லை.

பொருளாதார நெருக்கடிகளால் சரிந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஊழல் மற்றும் மோசடிகளை நிறுத்தி விட்டு அரசியல் கட்சி பேதமின்றி செயற்படும் போது நாட்டை அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்ல முடியும்.

இன, மத, மொழி, கலாசார வேறுபாடுகள் காரணமாக நாடு பிளவுபட்டு காணப்படுகிறது. இதனை முதலில் இல்லாது செய்ய வேண்டும். மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். அதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என தெரிவித்தார். (4)

# வறுத்தலைவிளான் பிள்ளையார் குள மணல் அகழ்வு விவகாரம்

## மாவட்ட செயலகத்தை விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி செயலகம் உத்தரவு

(அராலி)

வலி. வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வறுத்தலைவிளான் பிள்ளையார் குளத்தில் பாரிய மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக ஜனாதிபதி செயலகத்துக்கு முறைப்பாடு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் யாழ். மாவட்ட செயலகத்தை விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி செயலகம் எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவது,

குறித்த பிள்ளையார் கோயிலின் குளத்தில் இருந்து தனியார் ஒருவர் குளத்தில் தாமரை வளர்க்கப் போவதாக தெரிவித்து குளத்தில் இருந்து சுமார் 200 லோட்டுக்கு அதிக மான மணல் வெளி இடங்களில் விற்பனை செய்யப்பட்டதாக முறைப்பாட்டாளர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு எழுத்து மூலமாக விளக்கம் ஒன்றை அளிக்குமாறும் எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை தொடர்பில் முறைப்பாட்டாளருக்கும் ஜனாதிபதி செயலகத்திற்கும் தெரியப்படுத்துமாறு ஜனாதிபதியின் பொதுமக்கள் தொடர்புச் செயலாளரினால் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.(4-104)

# தொலைத் தொடர்பு வயர்களை சேதமாக்கிய விசமிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் மாசியப்பிட்டி பகுதியில் இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தொலைபேசி வயர்கள் மற்றும் தனியார் தொலைகாட்சி நிறுவனம் ஒன்றின் "கேபிள் டி.வி" வயர்கள் என்பன விஷமிகளால் வெட்டி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

சுன்னாகம் மாசியப்பிட்டி வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு குறிப்பிட்ட சில இடங்களில் விஷமிகள் வயர்களை வெட்டி சேதப்படுத்தி உள்ளனர்.


அதனால் சுமார் 200 மீற்றர் நீளமான இணைப்பு வயர்கள் சேதமடைந்துள்ளன.

சேதமாக்கப்பட்ட வயர்கள் தற்போது சீர் செய்யப்பட்டு, சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

சம்பவம் தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-33)

# மரக்கடத்தல் முறியடிப்பு



(தரும்புரம்)

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிக்கூடப் பகுதியில் நேற்று அதிகாலை கப்ரக வாகனம் ஒன்றில் பெறுமதிமிக்க பாலைமரக் குற்றிகளை ஏற்றி பயணித்த வாகனம் தொடர்பாக பூநகரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து சந்தேகநபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

அத்துடன் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட ஐந்து பாலைக் குற்றிகளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (4-316)

# 29 கிலோ கஞ்சாவுடன் முகமாலையில் இருவர் கைது

(முறிகண்டி)

யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கி கப்ரக வாகனத்தில் கஞ்சா ஏற்றி வருவதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் வைத்து 29கிலோ 150 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சூட்சுமமான முறையில் கப்ரக வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குரைத்ன தலைமையில் தீவிர சோதனையின் பின் கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



குறித்த சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்த பளை பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். (4-100-316)

# மன்னார் கல்வி வலயத்தில் 39 மாணவர்களுக்கு 9 ஏ

(மன்னார்)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் 2021 ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வெளியாகியிருந்தன.

இவ்வாறு வெளியான பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மன்னார் மாவட்டம் மன்னார் கல்விவலயத்தில் 39 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அதற்கு அமைவாக மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவிகள் 15 பேர் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

மேலும் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவர்கள் 8 பேர் 9 ஏ சித்திகளையும், மன். புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவர்கள் 7 பேர் 9 ஏ சித்திகளையும், பேசாலை பற்றிமா மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் 4 பேர் 9 ஏ சித்திகளையும், வங்காலை சென் ஆன்ஸ் பாடசாலை மாணவர்கள் 2 பேர் 9 ஏ சித்திகளையும், நானாட்டான் டிலாசால் கல்லூரி மாணவர்கள் 2 பேர் 9 ஏ சித்திகளையும்,அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஒருவர் 9 ஏ சித்திகளையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (4-285)

# 22 கரட்டுக்கு மேல் அணிந்தால் இலங்கை வர முடியாது

(கொழும்பு)

பயணிகள் 22 கரட்டுக்கு மேல் தங்க நகைகளை அணிந்து கொண்டு நாட்டிற்குள் நுழைய தடை விதிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அவர்கள் வருவதற்கு முன்னர் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் ஜெனரலிடம் அனுமதி பெற்றால் அனுமதிக்கப் படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிற்குள் தங்கம் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் பயணிகள் தங்க நகைகள் அணிந்து வருவதற்கு தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு அல்லது சாதாரண பயணிகளுக்கு இந்த புதிய கட்டுப்பாடு பொருந்தாது என நிதி இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் ஒருபோதும் உறங்குவதில்லை.

~ சே குவேரா

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk


## சந்தனப்பேழைகளில் உறங்குகின்ற மாவீரர்களே!

இன்று நவம்பர் 27 மாவீரர் நாள்.

தாயகம் உட்பட தமிழர் வாழும் தேசமெல்லாம் மாவீரர்களைத் தொழுதேற்றும் நாள்.

ஆம், தமிழினம் வாழ்வதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த வீரமறவர்கள் விழித்தெழுகின்ற திருநாள் இன்று.

உண்மை. தனக்கன்றி, தன் குடும்பத்திற்கன்றி, தன் உறவுகளுக்கன்றி தன் தமிழ்த் தேசத்துக்காக எந்த எதிர்பார்ப்புமின்றி தங்கள் உயிரை ஆகுதியாக்கிய மாவீரர்கள் தமிழ் அன்னை பெற்ற தவப்புதல்வர்கள். அவர்களின் தியாகத்தை எவரும் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது.

இலங்கை மண்ணில் காலந்தோறும் தமிழ்த்தாய் படுகின்ற அவலம் கண்டு வீறுகொண்டெழுந்த அந்த மாவீரர்களிடம் யாரையும் வஞ்சிக்கின்ற மனநிலை ஒருபோதும் இருந்ததில்லை.

மாறாக எம் தமிழினம் உரிமை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும். பேரினவாதப் பேய்க்கு எங்கள் இனம் இரையாகுவதைத் தடுத்தாக வேண்டும். இதுவே அவர்களின் ஒரே கொள்கை.

நியாயத்துவமுடைய அவர்களின் கொள்கையும் இலக்கும் இந்த நாட்டில் ஏற்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டிருக்குமாயின், தேசப்பற்று நிறைந்த பல்லாயிரக்கணக்கான தவப்புதல்வர்களை இந்த நாடு இழந்திருக்க மாட்டாது.

உண்மை. மாவீரர்கள் என்போர் சிங்கள இனத்துக்கு எதிரானவர்கள் என்ற விம்பமும் கருத்துருவாக்கமும் சிங்கள மக்களிடம் விதைக்கப்பட்டுள்ளது.

இந்த விதைப்பைச் செய்வதனூடாகச் சிங்களப் பேரினவாதிகள் தங்களின் இருப்பைத் தக்க வைத்தனர்.

ஆனால் மாவீரர்களின் இனப்பற்றும் - தேசப்பற்றும் அவர்களின் தியாகமும் உள்ளபடி சிங்கள மக்களிடம் எடுத்துக்கூறப்பட்டிருக்குமாயின், இந்த நாடு பெற்ற அருமந்த பிள்ளைகள் இன்றும் உயிரோடிருந்திருப்பர்.

என்ன செய்வது, பயங்கரவாதம் என்ற சொற்பதத்தோடு தமிழ் இனத்தின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிய ஆட்சியாளர்களும் படைத் தரப்பும் இன்று உண்மை நிலையை புரிந்திருக்கும்.

ஆம், நாட்டுக்குத் தேவையானவர்களை, தியாகிகளை, தேசப்பற்றாளர்களை கொன்றொழித்த நாடு ஒருபோதும் உய்யமுடியாதென்பதற்கு இலங்கையை விட்டால் வேறு உதாரணம் ஏது?

அதுமட்டுமல்ல தமிழினம் வாழ வேண்டும் என்பதற்காகத் தங்கள் அருமந்த உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களைப் பற்றி சிங்கள மக்கள் அறிய ஆர்வம் கொண்டிருந்தால்; மாவீரர்களின் நேர்மை, தியாகம், ஒழுக்கம், தலைமைக்குக் கட்டுப்படும் கண்ணியம் என்ற பல்வகை கூறுகளின் உன்னதத்தை சிங்கள மக்கள் அறிந்திருப்பர்.

மாவீரர்களை - தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை, பயங்கரவாதம் என்று கூறிய சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் ஒட்டுமொத்த நாட்டையும் கபளீகரம் செய்து சிங்கள மக்களையும் நடுத்தெருவில் விட்டுள்ளனர் எனும்போது பயங்கரவாதிகள் யார் என்பது இப்போது உணரப்பட்டிருக்கும்.

என்ன செய்வது விதி விடவில்லையாயினும் தமிழ் இனத்தை நேசித்த மாவீரர்கள் உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழர் இதயங்களில் என்றும் வாழ்வர் என்பது சத்தியம்.

## சமஸ்டி முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்

### செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

சமஸ்டி முறையின் கீழேயே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இந்தக் கோரிக்கையை நேற்று பாராளுமன்றில் விடுத்தார்.

எனினும் நடைமுறையில் உள்ள மாகாண சபைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டியதும், அவசியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அந்த மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் வழங்க வேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுக்கொண்டார். (ம-7)

## ஆசிரியர்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஐந்து வருடங்கள் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாயமானது

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

ஆசிரியர்கள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஐந்து வருடங்கள் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாயமானது. எனினும் சில பிரதேசங்களில் ஐந்து வருடங்களுக்கு முன்னரே ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று சென்றுவிடுவார்கள் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். கஷ்ட பிரதேசங்களில் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாமல் உள்ளது.

இதற்காக அவ்வப்போது பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. நல்லாட்சி காலத்தில் 10 ஆண்டு தீர்.மானம் எடுக்கப்பட்டது. அதற்கு முன்னர் வேறு ஒரு வடிவம் இருந்தது.

தேசிய பாடசாலைகளுக்கு இடையிலான இட மாற்றங்கள் இட மாற்ற சபையினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. மாகாண மட்டத்திலும் இவ்வாறான நடைமுறையே காணப்படுகின்றது.

இவ்விடயத்தில் சப்ரகமுவ மாகாணம் ஒரு முன்மாதிரியாகக் காணப்படுகின்றது. அதாவது இடமாற்றம் கோரும் ஆசிரியை கணினியினூடாக அந்தத் தகவலை பார்க்க முடியும். சப்ரகமுவ மாகாணத்தில் ஆசிரியர்களுக்கான இடமாற்ற விபரங்கள், கணினியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரச சேவை என்று வரும்போது அதில் ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றனர். மறுபக்கத்தில் பொதுசேவையாளர்கள் இருக்கின்றனர். எழுதுவினைஞர்கள் இடமாற்றம் பெற முடியும்.

ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதில்லை. அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றுமொரு இடத்துக்கு வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்கள் .இடமாற்றங்கள் என்று வரும்போது அதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.(ம-7)

## கைதடியில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி உதயசூரியன் சனசமூக நிலையத்தில் நேற்று பிற்பகல் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் -மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர்களுக்கு உதவிப் பொருட்கள் மற்றும் மரக்கன்று ஆகியனவும் வழ்ங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் மாவீரர்களின் உறவுகள் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு சுடரேற்றி,மலர் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

அத்துடன் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர்களுக்கு உதவிப்பொருட்கள் மற்றும் மரக்கன்று ஆகியனவும் வழங்கி வைக்கப்பட்டது.

அஞ்சலி மற்றும் உதவிப் பொருள் வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் கலைவாணி, சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான ஜெயக்குமார் மற்றும் விஜயேந்திரன் உள்ளிட்டோர் பங்குபற்றியிருந்தனர். (ம-7,30)

## ஹெரோயின் போதையுடன் மானிப்பாயில் இருவர் கைது

மானிப்பாய் பகுதியில் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 32 வயதுடைய இருவர் தலா 40 மில்லிக்கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,104)

## அச்சுவேலியில் கசிப்புடன் பெண் உட்பட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொக்கணை பகுதியில் 180 லீற்றர் கோடா மற்றும் 40 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவர் உட்பட இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

180 லீற்றர் கோடா மற்றும் 30 லீற்றர் கசிப்பினை காட்டுப் பகுதியில் மறைத்து வைத்திருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அதே பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவர் 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை காத்தான் கோட்டம், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
[illegible]"

கவிஞர் புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா- பாக்.மோதலால் அயல்நாடுகள் பாதிப்பு

## வெளிவிவகார அமைச்சு

**(கொழும்பு)— பிராந்தியத்தில் உள்ள முக்கிய நாடுகளுக்கு இடையேயான அதிகாரப் போட்டி, தெற்காசிய நாடுகளை பெரிதும் பாதித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.**

பங்களாதேஷ் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அவர், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யாமல் தெற்காசிய நாடுகள் முன்னேற முடியாது எனக் கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியில், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கு போன்றன ஒரு பிராந்தியமாக ஒன்றிணைந்து வளர்ச்சியடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை நடத்தி ஒருமித்த கருத்துக்கு வர வேண்டும் என்றும் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும் அலி சப்ரி கேட்டுக்கொண்டுள்ளார். தங்களுடைய வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு பொதுவான திட்டத்தில் செயற்பட்டால், அது பிராந்தியத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் என்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.(4)

# பொருளாதார நெருக்கடிக்கு நான் மட்டும் பொறுப்பல்ல

## கப்ரால் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைக்கு என்னை மாத்திரம் குற்றம் சாட்ட முடியாது என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்த தனது சமீபத்திய வெளியீடொன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எவரையாவது குற்றம் சாட்ட வேண்டும் என்றால் என்னை மாத்திரம் குற்றம்சாட்ட முடியாது. முன்னைய நிர்வாகம், முன்னைய அமைச்சரவை, முன்னைய நிதியமைச்சர், மத்திய வங்கியின் நாணய சபை ஆகியவற்றை குற்றம்சாட்ட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் நிதி குறித்த தீர்மானங்கள் அனைத்தும் கூட்டாக எடுக்கப்பட்டன.

எந்த முடிவையும் நான் தனியாக எடுக்கவில்லை. தன்னிச்சையாக எடுக்கவில்லை. இவை கூட்டாக எடுக்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# மது பாவனை குறைவு வருமானம் அதிகரிப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் மது பாவனை குறைந்துள்ள போதிலும் கலால் திணைக்களத்தின் வருமானம் அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மதுபான போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர் ஒட்டும் செயன்முறை அறிமுகம் செய்தமையை தொடர்ந்து வருமானம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ஆண்டின் முதல் 10 மாதங்களில், வருமானம் 20 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தரவுகளின்படி, பல்வேறு காரணங்களால் மதுபான தேவை சுமார் 30 வீதத்தால் குறைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனவரி முதல் நாட்டில் உரிமம் பெற்ற மதுபான உற்பத்தி நிலையங்கள் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என கலால் திணைக்களம் கூறியுள்ளது.

இதன்மூலம் மதுபானங்கள் மீது விதிக்கப்படும் வரிகளை அரசாங்கம் எவ்வித முரண்பாடுகளும் இன்றி வசூலிக்க முடியும் என அத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். (4)

# மிளகாய்த் தூளில் கலப்படம் பொதுமக்களே அவதானம்

(கொழும்பு)


சந்தைக்கு மிளகாய்த் துண்டுகள் மற்றும் மிளகாய்த் தூளை விநியோகித்துக் கொண்டிருந்த லொறியொன்றை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை மேற்கொண்டிருந்தனர்.

அம்பலாங்கொடை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனையில் மிளகாய்த் தூள் மற்றும் மிளகாய்த் துண்டுகளில், 50 சதவீதமான உப்பு, கோதுமை மா மற்றும் கலரிங் கலக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதன்மாதிரிகளை இரசாயன பரிசோதகருக்கு அனுப்பி கிடைக்கப் பெற்ற அறிக்கையில் இது தொடர்பில் தெரிய வந்துள்ளது.

மக்கள் உட்கொள்ளும் உணவு வகைகளில் இவ்வாறான விடயங்களைச் சேர்ப்பதன் மூலம் மக்கள் நோய்களுக்கு ஆளாக நேரிடுவதாக அம்பலாங்கொடை பொதுச் சுகாதார பரிசோதகர் ஹன்சிக நதீஷ் தெரிவித்தார். (4)

# இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டிய பிரித்தானியா



(கொழும்பு)

இலங்கையில் உள்ள கடற்றொழிலாளர்களின் உணவு மற்றும் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக பிரித்தானியா இலங்கைக்கு 8 இலட்சத்து 80 ஆயிரம் பவுன்சுகளை வழங்கவுள்ளது.

இலங்கையின் கரையோர பிரதேசங்களான மன்னார், சிலாபம், புத்தளம், தங்கல்லை, நீர்கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு உதவும் முகமாக குறித்த நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார். (4)

# எச்.ஐ.வி பரிசோதனைக்கு மாதாந்தம் 60 பேர் பதிவு

(கொழும்பு)

தேசிய எயிட்ஸ் கட்டுப்பாட்டுப் பிரிவு சேகரித்துள்ள தரவுகளின் படி ஒரு மாதத்திற்கு குறைந்தது, 60 பேர் எச்.ஐ.வி பரிசோதனைக்காக இணையத்தில் பதிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.know4sure.lk என்ற இணையத்தினூடாக எந்தவொரு நபரும் எச்.ஐ.வி பரிசோதனைக்கான நேரத்தை முன்பதிவு செய்ய முடியும் என பாலுறவு நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் நிமாலி ஜயசூரிய தெரிவித்துள்ளார். (4)

# கொழும்பில் அதிகரிக்கும் சிறுநீரக மோசடி

(கொழும்பு)

கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களின் சிறுநீரகங்களை விற்பனை செய்யும் மோசடி தொடர்பில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மோசடி சம்பவம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டுள்ளது.

பொறளையில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை இலக்கு வைத்து சிறுநீரகங்களை பணத்திற்கு வாங்கி வேறு நபர்களுக்கு விற்பனை செய்யும் மோசடி இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, அந்த மருத்துவமனையின் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொறளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், விசாரணைகள் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 65 பேருக்கு...

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் 65 பேர் 9 பாடங்களிலும் 9ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 249 மாணவிகள் 2021ம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், 65 மாணவிகள் 9ஏ சித்தியையும் 61 மாணவிகள் 8 பாடங்களில் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 100 வீத சித்தியைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## தமிழர் தாயகங்...

மற்றும் இனிப்புகள் வழங்கிவைக்கப்பட்டன.

அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் மாணவர்களால், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டுள்ளது.

அத்துடன் நல்லூர் ஆலய முன்றலில் யாசகர் ஒருவர் ஆலய வழிபாட்டிற்கு வருகை தந்தவர்களுக்கு, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு இனிப்புக்களை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33,60,104)



















## பேச்சுவார்த்தை...

னின் 68ஆவது பிறந்த தினம் நேற்று சனிக்கிழமை வல்வெட்டித்துறையிலுள்ள தலைவர் பிரபாகரனின் வீட்டின் முன்பாக வெடிகொளுத்தி, எள்ளுப்பாகு வழங்கி கொண்டாட்டப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த நோக்கத்திற்காக விடுதலைப் போர் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக தமது உயிர்களை ஈந்தவர்களை நினைவில் கொண்டு அதனை அடையக்கூடிய வகையில் சுதந்திரமான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் நடத்தப்படவேண்டும். தலைவர் பிரபாகரன் பிறந்த தினத்தில் திடசங்கற்பமாக ஒரு இனம் தங்கள் தலைவிதியை தாங்களே நிர்வகிக்கின்ற உரிமையை நிலைநாட்டவேண்டும்.

இதற்கு வடக்கு கிழக்கு மாநிலங்களில் சர்வஜன வாக்கெடுப்பில் புலம்பெயர் தமிழர்களும் பங்குபற்றக்கூடிய வகையில் நடத்தடப்படவேண்டும் இதனைத்தான் பிரபாகரனின் 68 ஆவது பிறந்த தினத்தில் எடுத்துக் கூற விரும்புகின்றோம். இதைவிடுத்து அரசாங்கம் தீர்வு தருவார்கள், பேசுவார்கள் என்று ஏமாந்தது போதும். 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக தீர்வு காண்போம் எனக் கூறுவது ஏன் என்பது புரியவில்லை. இதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏமாந்து விடக்கூடாது. தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து அதற்கான தீர்வுகளை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. நாங்கள் ஒன்றிணைவதே காலத்தின் தேவையாகவுள்ளது என்றார். (ம-7,33)

## ஐஸ் போதை...

இதுகுறித்து சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறுகையில்,

குழந்தைகளின் செயற்பாடுகளில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

ஐஸ், ஹெரோயின் மற்றும் புகையிலை தொடர்பான பொருட்களைப் பயன்படுத்துவது பாடசாலை மாணவர்களிடையே ஒரு போக்காக மாறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனநோய் மருந்துகளாகப் பயன்படுத்தும் சில மருந்து மாத்திரைகளைப் பயன்படுத்துவது ஒரு போக்காக மாறிவிட்டது.

போதைப்பொருள் பாவனையால் எதற்கும் தீர்வு கிடைக்காது. ஆனால் அது தற்போதுள்ள பிரச்சினைகளை அதிகரிக்கவும் புதியவற்றை உருவாக்கவும் உதவும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## மாவீரர்களை...

சென்று நினைவேந்தல் நிகழ்வை மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஒத்துழைக்குமாறு யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், நவம்பர் 27ஆம் திகதி மதியத்திற்கு பின்னர் வடக்கு கிழக்கு தாயகம் எங்கும் இருக்கக்கூடிய கடைகள், கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தங்கள் செயற்பாடுகளை இடைநிறுத்தி நினைவேந்தலை எழுச்சிபூர்வமாக செய்ய வேண்டும்.

மாலை 6.05 மணியளவில் தாயகத்தில் இருக்கக்கூடிய ஆலயங்களில் மணியொலியை எழுப்புவதற்கு ஆலய நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கட்சி வேறுபாடுகளைத் தாண்டி அனைத்து மக்களும் தங்களது நினைவேந்தலை உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

குறித்த நேரத்தில் நினைவேந்தல் நடைபெறுகின்ற துயிலும் இல்லங்களுக்கும் நினைவேந்தல் இடங்களுக்கும் செல்ல முடியாத மக்கள் இல்லத்தில் இருந்தவாறு உறவுகளை நினைவேந்த வேண்டும்.

யாழ்ப்பாண நகரில் நல்லூர்ப் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒழுங்கமைப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன என்றார். (ம-7,33)

## வீர...

இன்று நவம்பர் 27. தமிழினத்தின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்த மாவீரர்களை நினைவுகூரும் நினைவு தினமாகும்.

மாவீரர் நாள் நினைவுக்காக அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் புதுப்பொலிவுடன் புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது. மண்ணுக்காக மரணித்த மாவீரர்களின் நினைவு கூரும் நிகழ்வு இம்முறை வட மாகாணத்தில்பல பகுதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் அனைத்தும் ஏற்பாட்டுக்குழுவினர்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை வடமராட்சியிலும் குறிக்கப்பட்ட நேரத்தில் இடம்பெறவுள்ளது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட நினைவிடத்தில் குறித்த நேரத்தில் நிகழ்வு இடம்பெறும்.

அதேபோன்று வல்வெட்டித்துறை தீருவில் குமரப்பா புலேந்திரன் நினைவுச் சதுக்கத்திலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்திலும் குறிக்கப்பட்ட நேரத்துக்கு மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறும்.

தூர இடத்துக்கு செல்ல முடியாதவர்களின் நிலைமையை கருத்தில் கொண்டு பருத்தித்துறையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,33,60,104,316)

## தனித் தமிழீழம்...

றும் வகையில் நவம்பர் 27ஆம் நாள் மாவீரர் நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த நாளில் ஈழ விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்துவோம். இலங்கையின் களச்சூழல் மாறியிருக்கலாம். ஆனால், தனித் தமிழ் ஈழத்திற்கான தேவை அப்படியேதான் இருக்கிறது. அதுதான் இலங்கை இனச் சிக்கலுக்கு தீர்வும்கூட. உலகெங்கும்வாழும் ஈழத் தமிழர்களின் கனவும், தாகமும் கூட தனித் தமிழ் ஈழம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் என்றார். (ம-7)




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUNSAKTHY TRADERS (PVT) LTD

**Infomation Technolgy & Security Systems Providers**



## முச்சக்கரவண்டி கட்டண விழிப்புணர்வு!



### பயணிகளுக்கும் முச்சக்கரவண்டி ஓட்டுனர்களுக்கும் அன்பார்ந்த சன்சக்தி/லிங்க் லங்கா நிறுவனங்களின் வணக்கங்கள்

01.01.2018 முதல் இலங்கையில் மோட்டார் முச்சக்கரவண்டிகளுக்கான ஒழுங்கு விதிமுறைக்ள் நடைமுறைக்கு வந்துள்ளது. இது இலங்கை முழுவதும் கொழும்பில் இருக்கின்ற பயணி கள் குழமமும், வாகன ஓட்டுனர் குழமமும், லிங்க் லங்கா நிறுவனத்துடன் இணைந்து இப்போது நடைமுறையில் இருக்கும் கட்டணங்களை சரியானமுறையில் தீர்மானிக்கின்றார்கள். இவர்கள் தங்கள் கணிப்பில் ஒரு பயணியை ஒரு இடத்தில் இருந்து ஏற்றிச் சென்று அந்த பயணியை அவர் குறிப்பிடும் இடத்தில் இறக்கிவிட்ட பின்னர் ஏற்றிய இடத்திற்கு பயணிகள் இல்லாமல் வருவதையே அடிப்படையாக கொண்டதாகும். இவர்கள் மேல்மாகாணத்துக்கு ஒரு கூடுதலான கட்டணத்தையும் மற்றைய மாகாணங்களுக்கு குறைந்த கட்டணத்தையும் தீர்மானிக்கின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில், முச்சக்கரவண்டி சங்கங்களினுடான கலந்துரையாடலின் பின்னர், யாழ். மாவட்ட அரச அதிபரின் உத்தரவின்படி 2018ம் ஆண்டு மேல் மாகாணத்தைவிட அதிகமான கட்டணம் தீர்மானிக்கப் பட்டது. அதை நாங்கள் வடமாகாணம் முழுவதும் லிங்க் லங்கா நிறுவனத்தின் சம்மதத்துடன் நடை முற்றைப்படுத்தினோம். அது போன்ற ஒரு முடிவு முன்னெடுப்பார்களென்று, நாங்கள் சன்சக்தி/லிங்க் லங்கா நிறுவனம் சென்ற 3 வருடமாக காத் திருந்து பலன் எதுவும் கிடைக்கப்பெறவில்லை, எங்களின் சன்சக்தியின் முயற்சியின் பிரகாரம் மேல் மாகாண கட்டணத்தை வடமாகாணத்தில் நடை முறைப்படுத்தியுள்ளோம்.

**மாறுபடும் கட்டண விபரங்களை தெரிந்துகொள்ள இணைய தளத்தில்**
www.sunsakthy.com/meterfare **அல்லது முகநூலில்** facebook.linklanka/meterfare **அழுத்துங்கள்.**

**இன்றைய முச்சக்கரவண்டி மீட்டர்களின் கட்டண விபரங்கள்**

பகலிற்கும் இரவுக்கும் ஒரே கட்டணமே! நடைமுறைக்கு வந்த திகதி 1.07.2022

| | |
|---|---|
| ஆரம்ப கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு | 120 ரூபாய் |
| தொடர் கட்டணம் 100 மீட்டருக்கு (கிலோமீட்டருக்கு 110 ரூபா) | 11 ரூபாய் |
| தாமத/காத்திருக்கும் கட்டணம் ஒரு நிமிடத்துக்கு (ஒரு மணித்தியாலத்துக்கு 300 ரூபா) | 5 ரூபாய் |
| திரும்பி வரும் கட்டணம் 100 மீட்டருக்கு (ஒரு கிலோ மீட்டருக்கு 70ரூபா) | 7 ரூபாய் |

**முக்கியமான தூரங்களின் கட்டண விவரங்கள்**

| தூரம் | போவதற்கு மட்டும் | போய் திரும்பி வருவதற்கு |
|---|---|---|
| 10 | 1110 | 1810 |
| 15 | 1660 | 2710 |
| 20 | 2210 | 3610 |
| 25 | 2760 | 4510 |
| 30 | 3310 | 5410 |
| 35 | 3860 | 6310 |
| 40 | 4410 | 7210 |
| 45 | 4960 | 8110 |
| 50 | 5510 | 9010 |

தாமத கட்டணம் – முச்சக்கரவண்டி தாமத கட்டணம் முச்சக்கரவண்டி நிலையாக நிற்கும் போது 1 நிமிடத்துக்கு 5 ரூபா வீதமாக கணிக்கப்படும்.

பலரின் வேண்டுகோளுக்கமைய, பயணிகளின் போக்குவரத்தை சுமூகமாக்கி அவர்களின் முச்சக்கர வண்டி பாவனையை அதிகரிக்கும் நோக்குடன் சன்சக்தி/லிங்க் லங்கா நிறுவனத்தினரால் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

எங்களின் இந்த முயற்சி வெற்றி பெற்று ஒரு நேர்த்தியான நடைமுறைக்கு முச்சக்கரவண்டி பாவனை வர அனைவரின் ஒத்துழைப்பையும் நல்குமாறு வேண்டுகின்றோம்.

எங்களால் பயணக்கட்டணமானி வடக்கில் 1900 முச்சக்கரவண்டிகளுக்கு பொருத்தி .கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் அவற்றை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு சன்சக்தி/லிங்க் லங்கா நிறுவனத்தினரால் முடிந்த பங்களிப்பை வழங்குகின்றோம்.

கட்டணமானி பொருத்தாத முச்சக்கரவண்டி ஓட்டுநர்களும் அதில் பயணிப்பவர்களுக்கு வடக்கில் ஒரு மாற்றம் அரச அதிபர்களாளோ, ஆளுனர்களாளோ, முதலமைச்சராளோ ஏற்படுத்தும்வரை, மேல்மாகாண கட்டணத்தின் அடிப்படையில் பயணிப்பதன் மூலமாக பரவலாக முச்சக்கரவண்டி ஓட்டுனர்களுக்கு அதிக வருமானமும், பயணிகளுக்கு நேர்த்தியான தொந்தரவுகள் இல்லாத சுமூகமான பயணத்தையும் நடைமுறை படுத்த முடியும்.

எங்கள் பொருளாதாரத்தின் ஒரு தூணாக இருக்கின்ற போக்குவரத்தை சீர் செய்வதன் மூலமாக நாங்கள் எல்லோரும் எங்கள் வளர்ச்சிக்கும் எங்கள் நாட்டின் வளர்ச்சிக்கும் ஒரு பெரும் பங்களிப்பை வழங்க முடியும் என்ற முறையில் இந்த முச்சக்கரவண்டி கட்டண விழிப்புணர்வை முன்னெடுக்குகின்றோம்.

விழிப்புணர்வை ஊட்டுகின்றோம் - அதை நீங்கள் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அனைவரும் நன்மை யடைவோம்!

(13587)

**இன்று வடமாகாணத்தில் பாவனையில் இருக்கும் முச்சக்கரவண்டிகளின் விபரங்கள்:**

| இல. | ஊர் | பெயர் | தரிப்பிடம் | வாகன இலக்கம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | அனலைதீவு | R.திவாகர் | 6ம் வட்டாரம் | ABT-5666 | 077 336 8601 |
| 2 | அரியாலை | E.குணசீலன் | மாம்பழம் சந்தி | AAL-3896 | 077 245 2688 |
| 3 | அரியாலை | V.கனகசபாவதி | தபால்கட்டை சந்தி | YJ-5565 | 077 440 3776 |
| 4 | கந்தர்மடம் | S.ராஜேந்திரன் | கந்தர்மடம் | QH-1988 | 077 679 9902 |
| 5 | கொக்குவில் | V.ஜெயக்குமார் | கொக்குவில் | ABB-7737 | 077 749 1587 |
| 6 | கோண்டாவில் | K. மோகன்ராஜ் | இருபாலை வீதி கோண்டாவில் கிழக்கு | AAX-3775 | 077 994 6800 |
| 7 | கோண்டாவில் | S. உதய்குமார் | உப்புமடம் சந்தி கோண்டாவில் | JV-1300 | 077 826 3354 |
| 8 | கோண்டாவில் | C.குணசீலன் | ராமகிருஷ்ணா வீதி | ABT-8589 | 077 125 3593 |
| 9 | கோண்டாவில் | P.விஜிதரன் | கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி | ABC-8062 | 077 064 9202 |
| 10 | கோண்டாவில் | T.விக்னேஸ்வரன் | உப்புமடம் கோண்டாவில் தெற்கு | YE-2271 | 077 371 8980 |
| 11 | கோண்டாவில் | அ.அன்ரன் | உப்புமடம் கோண்டாவில் தெற்கு | QX-2133 | 076 782 2814 |
| 12 | கோண்டாவில் | A.தனுஜன் | உப்புமடம் கோண்டாவில் தெற்கு | 206-3230 | 077 663 6325 |
| 13 | சாவகச்சேரி | K.அருள்ராஜன் | சாவகச்சேரி | ABQ-8259 | 077 163 4119 |
| 14 | சுன்னாகம் | P.ரமணலக்ஸன் | ஐயனார் வீதி அம்பளை மேற்கு | YF-4388 | 077 377 0420 |
| 15 | தாவடி | V.செந்தூரன் | கே. கே .எஸ் வீதி தாவடி சந்தி | 203-8019 | 077 086 0434 |
| 16 | தெல்லிப்பளை | S.பிரன்ராஜா | தெல்லிப்பளை வைத்தியசாலை | ABS-6017 | 077 067 4516 |
| 17 | வல்வெட்டித்துறை | V.ரஜிதரன் | ஊரிக்காடு | QX-4439 | 077 880 9197 |
| 18 | வவுனியா | S. கண்ணன் | வவுனியா | AAT-7563 | 077 548 0478 |
| 19 | வவுனியா | U.விஜயகுமார் | வவுனியா | ABU-8264 | 077 654 3857 |
| 20 | யாழ்ப்பாணம் | D.N. ஜோன்சன் | பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக | QZ-0826 | 0 77 408 7682 |
| 21 | யாழ்ப்பாணம் | J.மகேந்திரன் | இரண்டாம் குறுக்குத் தெரு | QF-9738 | 077 326 7623 |
| 22 | யாழ்ப்பாணம் | N.கருணாகரன் | புதிய செம்மணி நல்லூர் வடக்கு | AAH-6962 | 077 361 8627 |
| 23 | யாழ்ப்பாணம் | V.சிவகுமார் | புதிய செம்மணி நல்லூர் வடக்கு | 207-0426 | 077 502 4607 |
| 24 | யாழ்ப்பாணம் | S.சற்குணராசா | ராசவின் தோட்டம் | AAK-3341 | 077 630 9851 |
| 25 | யாழ்ப்பாணம் | K.திருக்குமரன் | அரசடி பிள்ளையார் வீதி | YS-5535 | 077 820 2905 |
| 26 | யாழ்ப்பாணம் | S.சரவணபவன் | பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக | YN-0514 | 077 346 8295 |
| 27 | யாழ்ப்பாணம் | R.திவாகர் | ராசாவின் தோட்டம் சந்தி | ABT-5666 | 077 336 8601 |
| 28 | யாழ்ப்பாணம் | S.கனகராஜா | அரியாலை மேற்கு | YC-2013 | 077 360 8788 |
| 29 | யாழ்ப்பாணம் | N.புஷ்பராஷா | நாயன்மார் வீதி, நல்லூர் | AAC-9329 | 076 602 3557 |
| 30 | யாழ்ப்பாணம் | P. நிருசன் | நல்லூர் | QH-8786 | 077 220 3939 |
| 31 | யாழ்ப்பாணம் | S.மரியதாஸ் | பற்றிக்ஸ் சந்தி | ABA-1704 | 077 247 8720 |
| 32 | யாழ்ப்பாணம் | M.ராஜ்மோகன் | பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக | 206-6483 | 077 507 4108 |
| 33 | யாழ்ப்பாணம் | F.R.பெர்னாண்டோ | பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக | AAA-6925 | 077 086 9696 |
| 34 | யாழ்ப்பாணம் | P.சின்னப்பு | நாவாந்துறை | YC-0393 | 077 915 5628 |
| 35 | யாழ்ப்பாணம் | S.செல்வச்சந்திரன் | பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக | QE-4303 | 077 827 9431 |
| 36 | யாழ்ப்பாணம் | T.புவனேந்திரன் | வைத்தியசாலை முன்புாக | ABJ-4287 | 077 005 8170 |
| 37 | யாழ். நல்லூர் | V.கலைச்செல்வன் | நல்லூர் | 206-9627 | 077 666 9507 |
| 38 | யாழ்.அத்தியடி | M.வேல்முருகன் | குறுக்கு வீதி அத்தியடி | ABP-3471 | 077 651 0217 |
| 39 | கந்தர்மடம் | N.சிவகுமார் | கந்தர்மடம் | ABQ-7598 | 077 724 3270 |

**உங்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள எங்கள் தொலைபேசி இலக்கம் 077 552 7099 அல்லது 021 221 7994 தொடர்புகொள்ளுங்கள்.**
**உங்களுக்கு உதவி செய்வதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம்.**

**இன்று வடமாகாணத்தில் பாவனையில் இருக்கும் முச்சக்கரவண்டிகளின் விபரங்களை தெரிந்துகொள்ள இணைய தளத்தில்** www.sunsakthy.com/meter-details **அல்லது முகநூலில்** facebook.com/sst.sunsakthy/ **அழுத்துங்கள்.**

LINK LANKA

SST சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட் # 395, கண்டி (ஏ9) வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்
0212217994 077 552 7099 / 077 726 4196 www.sunsakthy.com info@sunsakthy.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.